25வது வெற்றிகரமான ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM
Tel:(416) 282-8059 EMail: vlambaram@sympatico.ca Fax:(416) 282-4978
Web : www.vlambaram.com / www.tamilvanakkam.com

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

கனேடிய இலங்கை இந்திய சர்வதேச விளையாட்டு செய்திகள்
உடனுக்குடன் செய்திகளை பார்வையிட
தமிழ்வணக்கம்.கொம்
24/7 NEWS
www.tamilvanakkam.com

நதி 25 பாலம் 01 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JANUARY 01, 2015

# 2015 இல் கனேடிய பொருளாதார வளர்ச்சி!

கனேடிய பொருளாதாரம் 2015 இல் வளர்ச்சி அடையும் என கனடாவின் ஆறு பெரிய வங்கிகளும் கூறியுள்ளதாக குளோப் அன்ட் மெயில் தனது டிசம்பர் 28, 2014 இணையத்தள பதிப்பில் கூறியுள்ளது. தற்போது மசகு எண்ணை பரல் ஒன்று $55 (US) ஆக இருக்கிறது. இது 2015 இலும் $65 தொடக்கம் $70 வரையில்தான் இருக்கும். இவ்வாறு மசகு எண்ணையின் விலை தொடர்ந்தும் குறைவாக இருந்தால் கனேடிய டொலரின் பெறுமதி 2015 இல் அமெரிக்க டொலரின் 0.82 சதத்தில் இருந்து 0.86 சதம் வரையில் இருக்கும். இது கனேடிய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். அத்துடன் அமெரிக்காவின் பொருளாதாரம் தற்போது மீட்பு பெற்று வளர்ந்து வருகிறது. அது கனேடிய உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியாளருக்கு இன்னொரு இனிப்பான செய்தியாகும்.




Royal Bank அதிகாரி ஒருவர் குளோப் அன்ட் மெயில் பத்திரிகைக்கு தெரிவிக்கையில், அமெரிக்காவின் தற்போதைய பொருளாதார வளர்ச்சி கனடா உட்பட ஏனைய பல நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் என்றார். கனடாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2015 இல் 2.2% ஆக இருக்கும் என்று BMO, CIBC, NBF வங்கிகளும், 2.3% ஆக இருக்கும் என Scotia மற்றும் TD வங்கிகளும், 2.7% ஆக இருக்கும் என RBC வங்கியும் கூறுகின்றன. அதேவேளை இவ் ஆறு வங்கிகளும் 2015 இல் கனேடிய டொலரின் பெறுமதி 0.82 இலிருந்து 0.85 வரை இருந்து பின்னர் 2016 இன் ஆரம்பத்தில் 0.88 இற்கு அதிகரிக்கும் என எதிர்வு கூறுகின்றன.

மொன்றியல் வங்கியின் அதிகாரி ஒருவர் குளோப் அன்ட் மெயில் பத்திரிகைக்கு தெரிவிக்கையில், கனேடிய தனியார் முதலீடுகள் மசகு எண்ணை விலை உயர்விலேயே தங்கியிருந்தாலும் இம்முறை அமெரிக்க பொருளாதார வளர்ச்சி அபரிதமாக, அதாவது 1996 இல் எவ்வாறு கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் இருந்ததோ அவ்வாறு, இருக்கும் என எதிர்பார்ப்பதால் அது கனேடிய பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் உதவும் என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில், கனேடிய டொலரின் பெறுமதிக்குறைப்பும் Gas இன் குறைந்தவிலையும் அமெரிக்க உல்லாசப்பயணிகளுக்கு மிகவும் சாதகமாக உள்ளது. அமெரிக்க கனேடிய எல்லைகளில் அமெரிக்க உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பை தற்போது காணக்கூடியதாக உள்ளது என்றார்.



ரொறொன்ரோ டொமினியன் வங்கி அதிகாரி ஒருவர் குளோப் அன்ட் மெயில் பத்திரிகைக்கு தெரிவிக்கையில், கனேடிய டொலர் தனது பெறுமதியின் அதிகுறைவு நிலைக்கு 2015 இன் மத்தியில் வந்து மீண்டும் அதன்பெறுமதி அதிகரிக்கத் தொடங்கும் என்றார். அமெரிக்க மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) இன் வளர்ச்சி 2013 இல் 2.0% ஆக இருந்து 2014 இல் 5.0% ஆக அபரித வளர்ச்சி அடைந்துள்ளது. இது அமெரிக்காவின் கடந்த 11 வருடகால சரித்திரத்தில் ஏற்பட்டிராத அபரித வளர்ச்சி ஆகும்.

அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி அமெரிக்கர்களுக்கு மட்டும்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
அவசரகால பல் வைத்திய சேவைகள்
பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

MORTGAGE ALLIANCE The Guardian
SAVE YOUR MONEY SAVE YOUR HOME
- 2nd Mortgage - Purchase & Refinance
- Renewal & Switch - Home Equity Loan
- Residential & Commercial Mortgage
We're Hiring Experienced & New Agents
Gini Annarasa
Cell: 416.830.3241
Tel:416.556.7002 Fax: 416.556.5115
Toll Free: 1 877.336.3487
*Independently Owned & Operated







கனடாவின் மூத்த தமிழ் இதழ்

விளம்பரம்

VLAMBARAM

வளர்கிறது விளம்பரம்

வளர்ப்பது நீங்கள்


விளம்பரத்திற்கு அழகு

வாசகர்களின் ஆதரவு

1991............2015

வெள்ளிவிழா காணும்

விளம்பரம் இதழ்



நன்றி

# மஹிந்த அரசிற்கு மோசமான காலநிலை

ஜனாதிபதி தேர்தலுக்கு சுமார் ஒரு வாரமே இருக்கும் நிலையில், மஹிந்த அரசாங்கத்தின் நிலைமை மிக மோசமான தொரு கட்டத்திற்கு வந்துவிட்டது. கடந்த ஒரு மாத காலமாக கட்சித் தாவல்கள் இடம்பெற்று வந்த நிலையில், கடந்த 25 தினங்களுக்குள் மாத்திரம் 155 கட்சித் தாவல்கள் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் எதிரணியின் பக்கம் 111 பேரும், ஆளும் கட்சிக்கு 44 பேரும் கட்சி மாறியுள்ளதாக இலங்கையிலிருந்து வெளியாகும் ஊடகங்கள் கணிப்பிட்டுள்ளன. சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக வும் அரசாங்கத்தில் சுகாதார அமைச்சராக வும் இருந்த மைத்திரிபால சிறிசேன கட்சித்தாவலை தொடக்கி வைத்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனாநாயக்க பொது வேட்பாளர் மைத்திரிக்கு வழங்கிய ஆதரவு மேலும் கட்சித் தாவல் நடவடிக்கையை விரைவு படுத்தியது. ஆளும் தரப்பிலிருந்து, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை - பிரதேச சபை உறுப்பினர்கள் என பலர் எதிரணிக்கு சென்றுள்ளனர். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஆளும் கட்சிக்கு சென்றவர்களில் பலமிக்கவர்கள் என்று எவரையும் குறிப்பிட்டு சொல்ல முடியாது. ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து அதன் பொதுச் செயலாளராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்க மட்டுமே ஆளும் தரப்பிற்கு சென்ற ஒரு முக்கியமான நபர் என்று சொல்லலாம். அவரும் தனிப்பட்ட முறையில் பெரிய மக்கள் செல்வாக்குள்ளவராக குறிப்பிடக்கூடியவ ரல்ல. ஆனால், செல்வாக்கு மிக்க பலர் ஆளும் தரப்பிலிருந்தே வெளியேறி எதிரணிக்கு சென்றுள்ளனர்.

மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவிற்கு வரம் கிடைத்த போதிலும் அவர் தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம் நாடாளுமன்றத்தில் இருந்த மூன்றிலிரண்டு பெரும்பான்மையை தற்போது இழந்து விட்டது. கடந்த 22.12.2014 திங்கட் கிழமையுடன் அது இழக்கப்பட்டு விட்டது. நாடாளுமன்றத்தில் 163 உறுப்பினர்களை அரசாங்கம் கொண்டிருந்தது. எனினும், அந்த எண்ணிக்கை குறித்த தினத்தன்று 148 ஆக குறைந்துள்ளது. இதேவேளை, ஆளும் கட்சியிலிருந்து விலகிய 15 உறுப்பினர் களும் எதிரணியில் இணைந்து கொண்டனர். இதனால், எதிரணி உறுப்பினர்களின் எண்ணிக்கை 77ஆக அதிகரித்துள்ளது. அரசில் செல்வாக்கு மிக்க அமைச்சராக விருந்த ஒரு முஸ்லிம் அமைச்சரான ரிஷாத் பதியுதீன் மற்றும் நாடாளுமன்ற அமீர் அலி ஆகிய இருவரும் எதிரணியுடன் சில நாட்களுக்கு முன்னர் இணைந்து கொண்டனர். இதனை அரசாங்கம் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. ரிஷாத் பதியுதீனின் கட்சியிலிருந்த அமீர் அலிக்கு அரசாங்க கட்சியிலிருந்த நாடாளுமன்ற உறுப்பினரான அஸ்வரின் இடத்தை அரசாங்கம் வழங்கியது. இது ஒரு பேரம் பேசும் நிகழ்வாகவே நடந்தது. அஸ்வரை




பதவி விலகச்செய்து அவரின் இடம் அமீர் அலிக்கு வழங்கப்பட்டது. அமீர் அலி அப்பதவியை ஏற்று சில நாட்களிலேயே ரிஷாத் பதியுதீனுடன் சேர்ந்து எதிரணிக்கு ஆதரவை தெரிவித்து விட்டார். இவ்வாறு எல்லாம் நடக்கும் என்று அரசாங்கத்தினர் கனவிலும் கூட நினைத்திருக்க மாட்டார்கள். 2010ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னர் நாடாளுமன்றத்தில் தனக்கு கிடைத்த மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை தக்கவைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் கடும் பிரயத்தனம் செய்த போதும் அக்கனவு இப்போது கலைந்துவிட்டது. இந்த நிலையில், தமிழ் தேசியக்கூட்டமைப்பின் ஆதரவும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸினது ஆதரவும் அரசாங்கத்திற்கு இன்றியமையாததாகும். ஆனால், கடந்த டிசெம்பர் 28ம் திகதி திங்கள் கிழமை முஸ்லிம் காங்கிரஸ் தமது முடிவை அறிவி த்து விட்டது. மைத்திரிபால சிறிசேன தலைமையிலான பொது எதிரணிக்கு அதரவு வழங்குவதென முடிவு அறிவிக்கப்பட்டு விட்டது. இதனையும் அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரான ரவூப் ஹக்கீம் கூட இவ்வாறானதொரு முடிவை அறிவிக்க வேண்டிவரும் என்று நினைத்தி ருக்கமாட்டார். யாருக்கு ஆதரவளிப்பது என்பதை தீர்மானிக்க பல்வேறு கூட்டங்களை கட்சிக்குள் நடத்தியும் ஒரு முடிவினையும் மேற்கொள்ள முடியாத நிலைமை அவருக்கு ஏற்பட்டது. இறுதியில், கட்சிக்குள் அவருக்கு ஏற்பட்ட நிர்ப்பந்தம் - நெருக்கடி மற்றும், முஸ்லிம் மக்களின் உணர்வுகள் என்பன இந்த முடிவை எடுக்க வேண்டியதொரு கட்டாயத்தை அவருக்கு ஏற்படுத்தியது.

கிழக்கு மாகாண சபை தேர்தலின் பின்னர் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதா, அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து மாகாணசபை ஆட்சியை அமைப்பதா என்றதொரு நிலை ஏற்பட்டபோது, முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் தேர்தல் பிரச்சார கூட்டங்களில் பேசியதை யெல்லாம் காற்றில் பறக்கவிட்டு, அரசாங்கத்திற்கு ஆதரவை வழங்கினார். தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து மாகாண சபை நிர்வாகத்தை நடத்த முன்வந்தால் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினருக்கே முதலமைச்சர் பதவியையும் விட்டுக்கொடுக்கத் தயார் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ரவூப் ஹக்கீமிடம் தெரிவித்திருந்தார் அதனையும் கூட ஏற்றுக் கொள்ளாமல் அரசாங்கத்திற்கு ஆதரவை ஹக்கீம் வழங்கினார். இது, கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. ஹக்கீம் தனது அமைச்சுப் பதவியை தக்க வைக்கும் நோக்கத்திலேயே இவ்வாறானதொரு முடிவை எடுத்தார் என்றே முஸ்லிம் மக்கள் கருதுகின்றனர். இந்த நிலையில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் அரசாங்கத் தரப்பிற்கு ஆதரவை தெரிவிக்கும் முடிவை ஹக்கீம் எடுத்திருப் பாரானால் அவர் முஸ்லிம் காங்கிரஸின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவை யும், முஸ்லிம் மக்களின் ஆதரவையும் இழக்கும் நிலையே ஏற்பட்டிருக்கும். இந்தக் கட்டத்திலேயே ஹக்கீம் இவ்வாறானதொரு முடிவை அறிவிக்க வேண்டி வந்தது.

இடையில் ஒரு பேரம் பேசுதலுக்கான கட்டத்திற்கு அவர் முயன்ற போதும், அதுவும் சரிவரவில்லை. ஏற்கனவே முன் வைக்கப்பட்ட முஸ்லிம்களுக்கான கரையோர மாவட்டம் ஒன்றை தருவதற்கு அரசாங்கம் முன்வந்தால் அரசிற்கு ஆதரவளிக்கலாம் என்று அவர் தெரிவித்திருந்தார். அதற்கு சாதகமாக அரசும் சில சமிக்கைகளை தெரிவித்தால் அதனைக் கூறி கட்சியினரை சமாளித்து அரசிற்கு ஆதரவை தெரிவிக்கலாம் என்பது அவரது இறுதிக்கட்ட எண்ணமாக இருந்தது. ஆனால் அரசாங்கம் அதற்கு இணங்கவில்லை. இறுதியில், அமைச்சுப் பதவியா? கட்சியா? என்ற நிலையில், விரும்பியோ விரும்பாமலோ இந்த முடிவினை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அறிவித்துவிட்டார். அவர் இறுதிக் கட்டத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவளித்திருந்தாலும் முஸ்லிம் பொதுமக்கள் அதனை ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார்கள். அவர்கள் எதிரணிக்கு வாக்களிக்கும் முடிவையே எடுத்திருப்பார்கள். தான் சுவர்க்கத்தில் தயிர் சாப்பிடும் நிலையில் உள்ளதாக ஒரு கடத்தில் ரவூப் குறிப்பிட்டிருந்தார். இது அவரின் மிக இக்கட்டானதொரு நிலையை எடுத்துக்காட்டியது. அரசாங்கம் இறுதிக் கட்டத்தில் எதிர்பார்த்திருந்த முஸ்லிம் ஆதரவும் இப்போது இல்லை என்றாகி விட்டது. அடுத்ததாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இன்னும் ஒரு முடிவையும் அறிவிக்கவில்லையெனினும் அவர்கள் தங்களுக்கு ஆதரவளிக்க மாட்டார்கள் என்பதை அரசாங்கம் விளங்கிக் கொண்டுள் ளது. அதனால்தான் மைத்திரிபால சிறிசேன விற்கும் தமிழ் தேசியக்கூட்டமைப்பிற்குமி டையே இரகசிய உடன்படிக்கை கையெழுத்தாகியுள்ளதாக முன்னரேயே அரசாங்கம் சிங்கள மக்களுக்கு கூறத் தொடங்கிவிட்டது.

**- விகிர்தன் -**

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முடிவை இரா.சம்பந்தன் அறிவிப்பார் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருந் தது. இந்நிலையில் இந்தியா சென்றிருந்த இரா. சம்பந்தன் நாடு திரும்பியதும் கடந்த 28ஆம் திகதி இரவு கொழும்பில் இது குறித்து கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஆனாலும், முடிவு எதனையும் அவர்கள் உடனடியாக அறிவிக்கவில்லை அரசாங்கத் தின் விசமத்தனமான பிரச்சாரங்களில் சிறிதளவே னும் தளர்வினை ஏற்படுத்துவதற்காக இறுதித்தருணத்தில் கூட்டமைப்பினர் தங்கள் முடிவை அறிவிக்கலாம் என்றே கூறப்படுகின்றது.

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# வீட்டுல நீங்க ஆபீஸரா?

கேள்வி: அலுவலகத்திலும், வீட்டிலும் ஏன் வெவ்வேறு விதமாக நடந்து கொள்கிறோம்? சில நேரங்கள் என் அலுவலத்தில் நான் நல்லபடியாக நடந்து கொள்கிறேன். ஆனால் வீட்டில், அதேவிதமாக நடந்து கொள்ள முடியவில்லை என்றும் உணர்கிறேன். ஏன் இந்த இரண்டுபட்ட நிலை?

சத்குரு: சரி, அலுவலகத்தில் யாரோ ஒருவர் உங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டே இருப்பதால் ஒருவேளை நீங்கள் அலுவலகத்தில் நல்லவராக இருக்கலாம். வீட்டில் உங்களைக் கட்டுப்படுத்த சிரமப்படுகிறார்களோ என்னவோ! (சிரிக்கிறார்) ஒரு சிலர் அலுவலகத்தில் நல்லவர்களாகவே நடந்து கொள்வார்கள். வீட்டுக்கு வந்தவுடன் அவர்களின் நடவடிக்கை மோசமாகும்.

இல்லம் என்னும் அழகிய அமைப்பை நீங்கள் உருவாக்கக் காரணமே உங்களுக்கு அது தேவைப்பட்டதால்தான். அலுவலகத்தின் பொறுப்பு கூடிப் போக உங்கள் இல்லம் உங்கள் மேல் பயணப்படும் சுமை ஆகிவிட்டது. நீங்களும் பாரம் தாளாமல் துவண்டு போகிறீர்கள்.

அலுவலகம் சிறந்ததா? வீடு சிறந்ததா? அல்லது எனக்கு சமூகத்தின் மேல் தீராத ஆர்வம் இருக்கிறதே, அது சிறந்ததா? என நீங்கள் வரிசையாய் கேள்விகளை அடுக்கலாம். நாம் தெளிவாய் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான விடயம், ஒரு சூழ்நிலையைவிட மற்றொன்று முக்கியமானதல்ல.

ஒருவர் என்ன செய்கிறார் என்பது முக்கியமல்ல. ஆனால் அவர் அதை எப்படி செய்கிறார் என்பதே முக்கியம். எனவே வீடு தானே என்று பிரித்துப் பார்க்காதீர்கள். உங்கள் வீடு அல்ல அது, உங்கள் வாழ்க்கை அது.

> பெண்களை பலவீனமானவர்கள் என்று கருதுகிற வழக்கம், உலகம் முழுவதுமே உள்ளது. உடலளவில் இயற்கையாகவே ஆண்கள் கூடுதலான பலம் பொருந்தியவர்கள். அவ்வளவு தான். ஆனால், எல்லா நிலைகளிலும் பெண்களை பலவீனமானவர்களாக சித்தரிக்கும் போக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே நடைமுறையில் உள்ளது. பெண்ணை மதிக்காத எந்த ஆணும் தன்னை உணர வழியே இல்லை. ஏனெனில் ஒவ்வோர் ஆணிலும் பெண்மையின் தன்மைகள் உண்டு.

வீடு என்கிற அமைப்பைப் பற்றிய தெளிவு அவர்களிடம் இல்லை. குழப்பத்திலேயே இருக்கிறார்கள். வீட்டில் ஓய்வில் இருக்கும் போது எதைச் செய்தாலும் ரிலாக்ஸ்டாக, தாறுமாறாக செய்யலாம் என்றே பெரும்பாலான மக்கள் நினைக்கிறார்கள்.

ஓய்வு நிலையில் இருப்பது என்றால் செய்யும் செயல்கள் அனைத்தையும் திறம்பட செய்வது என்பது அவர்களுக்கு பிடிபடுவதில்லை. நாம் எவ்வளவு ஓய்வில் இருக்கிறோம் என்பதே நம் செயல்கள் அனைத்திற்கும் அடிப்படை.

அலுவலகம் மட்டும் உங்களை ஊட்டி வளர்க்கவில்லை. உங்கள் இல்லமும் உங்களை முழுதாய் வளர்கிறது. உங்களால் ஓய்வு நிலைக்கு செல்ல இயலவில்லையா? உங்கள் செயலையும் உங்களால் சிறப்பாக செய்ய இயலாது. இதனால் நீங்கள் ஓய்வு நேரத்தைச் செல-வழிக்கும் உங்கள் இல்லம் சிறப்பாய் இருப்பது உங்கள் அலுவலக வேலைகளையும் சிறப்பாய் செய்வதற்கு வழி வகுக்கும்.

அலுவலகம் மட்டும் உங்களை ஊட்டி வளர்க்கவில்லை. உங்கள் இல்லமும் உங்களை முழுதாய் வளர்கிறது. உங்கள் வாழ்வின் ஒரு பகுதியை அக்கறை இல்லாமலும், மற்றொரு பாதியை அக்கறையோடு கவனிக்கவும் விரும்புவீர்களா?

உங்கள் அணுகுமுறை இப்படி இருந்தால் உங்களுக்கு மிஞ்சப் போவது துன்பமே!

உங்கள் குடும்பத்துடன் நீங்கள் எத்தனை நேரம் செலவழிக்கிறீர்கள் என்பதைவிட எப்படி செலவழிக்கிறீர்கள் என்பதே முக்கியம். நீங்கள் அக்கறையில்லாமல் கையாளும் ஒவ்வொரு செயலும் மறுபடியும் உங்களிடமே வந்து சேரும். நிச்சயமாக வரும்.

அலுவலகத்தில் பணிநீக்கம் என்னும் விளைவு இருப்பதால் நீங்கள் அங்கு ஒழுக்கசீலராய் விளங்கலாம். ஒருவேளை வீட்டில் உங்கள் பணி நிரந்தரப்படுத்தப் பட்டதால் என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம் என்ற துணிச்சலில் நீங்கள் செயல்படலாம்.

நாம் வாழ்வது 21 ஆம் நூற்றாண்டு என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். வீட்டில் இருப்பவர்களும் உங்களை பணிநீக்கம் செய்ய முடியும். இனியும் அது ஒரு நிரந்தரப் பதவி கிடையாது.


நம் பெண்களும் துரிதமாக மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்திய ஆண்களுக்கு அவர்கள் என்ன செய்தாலும் நம் மனைவி பொறுத்துக் கொள்வாள், என்கிற மனோபாவம் வலுவாக இருக்கிறது.

அப்படி நினைத்துக் கொண்டிருப்பவர்களில் நீங்களும் ஒருவரா? அவர்கள் மாறிக் கொண்டிருக்கின்றனர் என்பதை நீங்கள் வெகு சீக்கிரமாக புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் அவர்களுக்காக வாழாத பட்சத்தில் அவர்கள் உங்களுக்காக வாழ மாட்டார்கள். சூழ்நிலைகள் மாறிக் கொண்டிருக்கின்றன. அதனால் நீங்கள் மாறிவிடுவதே சிறந்தது.

பணிச் சூழ்நிலைகள், பணித் தேவைகள் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பது நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டேதான் செல்கிறது. உண்மைதான். உங்கள் வேலையில் நீங்கள் வெற்றியை நோக்கி நகர நகர உங்கள் குடும்பத்துடன் நீங்கள் செலவிடும் நேரமும் குறைந்து கொண்டேதான் செல்லும்.

ஆனால் உங்கள் குடும்பத்துடன் நீங்கள் எத்தனை நேரம் செலவழிக்கிறீர்கள் என்பதைவிட எப்படி செலவழிக்கிறீர்கள் என்பதே முக்கியம்.

எங்களுடன் இத்தனை நேரம் ஏன் உட்கார்ந்து பேசுவதில்லை என்று அவர்கள் கேட்பதில்லை, அவர்களுடைய தேவையெல்லாம் அவர்கள் மீது உங்கள் கவனம்.



சத்குரு வாசுதேவ்

அவர்களை புரிந்து கொண்டு அவர்களுக்கு தேவையான முக்கியத்துவத்தை நீங்கள் அளித்தால், நீங்கள் அவர்களுடன் ஒரு நிமிடம் கூட செலவழிக்கத் தேவையில்லை. அவர்கள் உங்களுக்கு முக்கியமானவர்கள் என்பதை அவர்கள் உணருமாறு செய்யுங்கள்.

அவர்களுக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பதை அவர்கள் உணர்ந்தால், உங்களை அவர்கள் பொருட்படுத்தவே மாட்டார்கள் என்பதே நிஜம். யாருக்குத்தான் தன் மேல் அக்கறை இல்லாத ஒரு மனிதருக்காக வீட்டில் உட்கார்ந்து கொண்டு வெம்பப் பிடிக்கும். அவர்கள் தேவையெல்லாம், நீங்கள் அவர்களை புரிந்து கொள்வதே!

முயற்சி செய்து பாருங்கள், உறவுகள் சுவைக்கும்!

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org





**AABS DON VALLEY PEST CONTROL INC.**
**Please Call @ 647-931-7124 OR 1-800-816-6406**

ABDV PEST CONTROL
The Name You Can Trust



Licensed Graduate Exterminator, Insured and 10 years Experience Free Inspection, Free Estimates & Guaranteed services in GTA and out of GTA We control Cockroaches, Bedbugs, Mice, Flea, Wasps/Bees, Earwigs ,Carpenter ants and other ants, Fruit Flies, Drain flies, Silver fish, Centipedes, Spiders etc. We provide pest control services for Residential, Commercial, Industrial, Food Warehouses, Food Processing and Packaging industries.

MORTGAGE ALLIANCE
Lic # 10530
RIGHTBROKER = RIGHTMORTGAGE

Corporate Office :
2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto

Brockerage Office :
112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

## நல்ல ரேட்ல மோட்கேஜ்,
## லைன் ஒப் கிரெடிட்,
## ரீபைனான்ஸ்,
## 2வது, 3வது மோட்கேஜ்,
## பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
## எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க,
## வீடு வாடகைக்கு விட அல்லது பெற்றுக்கொள்ள



பவர் ஒப் சேல் பிரச்சினையா ?

மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

## "மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

Happy New Year 2015




416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

**வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00**

உங்கள் மாதாந்த மோட்கேஜ் கொடுப்பனவுடன் Credit Card, Car Loan, Personal Loan, Line of Credit மற்றும் ஏனைய அதிகளவு வட்டி செலுத்தும் கடன்களை ஒன்று படுத்தி எவ்வாறு உங்களது மாதாந்த கடன் சுமையை குறைப்பது???

5 Yrs Fixed Rate : 2.79 % *OAC
5 Yrs Variable : Prime - .70% (2.3 %)

BEST RATE GUARANTEED

MORTGAGE IN ANY SITUATION



எமது முகவரி

## 1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**

For All Your Real Estate Services

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

# 100 நாட்களில் புதிய தேசமும் உலகை வெல்லும் வழியும்!

## தாயகமடல்

இலங்கையின் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களான மஹிந்த ராஜபக்ஸ, எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ஆகியோரது தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால், அவற்றில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து எவையும் குறிப்பிடப்படவில்லை. மஹிந்த ராஜபக்ஸவின் பத்தாண்டு கால ஆட்சியில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் எவ்வித அக்கறையும் காண்பிக்கப்படாத நிலையில், காணிகள் சுவீகரிப்பு முதலான, தமிழ் மக்களுக்கு மேலும் துன்பங்களை ஏற்படுத்தும் பல்வேறு புதிய சிக்கல்களும் தோற்றுவிக்கப்பட்டன. எனவே, மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து தமிழ் மக்கள் கவனம் செலுத்தவில்லை. ஆட்சிமாற்றம் - நல்லாட்சி என்பதை பிரதான கோசமாக முன்வைத்து களமிறங்கியுள்ள எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் என்ன கூறப்பட்டிருக்கின்றது என்கிற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், அதில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து எதுவுமே இல்லை என்பதுதான் ஏமாற்றம் தரும் விடயமாகும்.

‘100 நாட்களில் புதிய தேசம்’ என்ற தலைப்பில் வெளியாகியுள்ள மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் என்ன முக்கியமாக இருக்கின்றது என பார்ப்போம். புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்படி சட்ட ரீதியான விசேட சிறப்புரிமைகள் ஜனாதிபதிக்கு கிடைக்காது. சகல திருத்தங்களிலும் நாட்டின் ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு, இறையாண்மை என்பன பாதுகாக்கப்படும். தன்னிச்சையான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைக்கு பதிலாக நாடாளுமன்றம் மற்றும், அதனுடன் சம்பந்தப்பட்ட நிறைவேற்று அதிகாரத்துடன் கூடிய அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்படும். அதில் ஜனாதிபதியும் நாட்டின் ஏனைய பிரஜைகளை போல் சட்டத்திற்கு முன் சாதாரண பிரஜையாக கருதப்படுவார். அமைச்சுக்களின் செயற்பாடுகளுக்காக நாடாளுமன்ற தெரிவுக் குழு முறை வலுப்படுத்தப்படும். இதனை தவிர, மக்கள் பிரதிநிதிகள் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிக்கோவை சட்டமாக்கப்படும். விருப்பு வாக்கு முறை ஒழிக்கப்படும். அனைத்து நாடாளுமன்ற தொகுதிகளுக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கட்டாயம் தெரிவு செய்யப்படும் வகையில் தேர்தல் முறையிலும் மாற்றங்கள் செய்யப்படும்.



நல்லாட்சியை கண்காணிக்க, கண்காணிப்பு கட்டமைப்பு உருவாக்கப்படும். அரசியலமைப்புத் திருத்தம் மூலம் நீதித்துறை, பொலிஸ், தேர்தல், கணக்காய்வு, சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் பக்க சார்பின்மையை பாதுகாக்க சுயாதீன ஆணைக் குழுக்கள் ஏற்படுத்தப்படும். நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாக்க சுயாதீன ஆணைக்குழு ஏற்படுத்தப்படும். அத்துடன் நீதிபதி நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் சிரேஸ்டத்துவம் மற்றும் திறமைகளின் அடிப்படையில் வழங்கப்படுவதற்கான முறை உருவாக்கப்படும். தேசிய நிலைப்பாடுகளை கொண்ட வெளிநாட்டு கொள்கை உருவாக்கப்படும். மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு சரியான பதிலை வழங்கி இலங்கை தொடர்பில் புதிய தோற்றப்பாடு உலகத்தின் மத்தியில் கட்டியெழுப்பப்படும். அரச ஊடகங்கள் ஆளும் கட்சியின் பிரச்சார ஆயுதமாக பயன்படுத்துவதை நிறுத்தி சமநிலை தகவல்களை வழங்க தேவையான கொள்கைகள் உருவாக்கப்படும். ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்களின் சுதந்திரம் பாதுகாக்கப்படும் வகையில் குறுகிய மற்றும் நீண்டகால வேலைத் திட்டங்கள் உருவாக்கப்படும். இவை மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்களாகும். ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகாரங்கள் சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்லும் நிலைமைகளை - நடைமுறைகளை பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கை மக்கள் உணர்ந்துள்ளனர். நீதித்துறைக்கு என்ன நடந்தது என்பதற்கு உதாரணமாக முன்னாள் நீதியரசரான ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு நடந்த விடயங்களை குறிப்பிடலாம்.

இந்நிலையில், நாட்டில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக ஒழித்து ஒரு ஜனநாயக நெறிமுறையை நிலைநாட்டுவதாகவே மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்துள்ளது. தமிழர்களின் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினையாக உள்ள போதும் அது குறித்து எதுவுமே அந்த விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறு குறிப்பிட்டால் அதனை சிங்கள மக்கள் மத்தியில் நாட்டைப் பிரிப்பதாக ஆளும் கட்சியினர் பரப்புரை செய்வர். அதனால் சிங்கள மக்களின் வாக்குகளை இழக்க வேண்டி வரும் என எதிரணியினர் பயப்படுகின்றனர். எது எவ்வாறிருப்பினும் மைத்திரிபாலசிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ் மக்களுக்கு விரக்தியை - விசனத்தை ஏற்படுத்தியிருப்பதை குறிப்பிட்டுத்தானாக வேண்டும்.

‘மஹிந்த சிந்தனை - உலகை வெல்லும் வழி’ என்ற மஹிந்த ராஜபக்ஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர்களின் நலன் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள சிலவற்றை பார்ப்போம். பயங்கரவாத செயற்பாடுகள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதான வடபகுதி இளைஞர், யுவதிகளுக்கு எதிராக வழக்குத் தொடரல் அல்லது தொடரா திருப்பது குறித்து ஆராய ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் முழு அதிகாரம் கொண்ட குழு நியமித்தல். கைவிடப்பட்ட வாகனங்கள், மீட்கப்பட்ட நகைகளை மீள வழங்கும் நடவடிக்கைகளை இந்த வருடத்தினுள் பூர்த்தி செய்தல். குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் இராணுவம் பயன்படுத்தும் காணிகள் மற்றும் கட்டிடங்கள் வழங்கும் நடவடிக்கையை நிறைவு செய்தல். மிகச் சிறிய இனவாத, மதவாத குழுக்களினால் ஏற்படுத்தப்படும் சமூக பிரச்சினைகளை எதிர்காலத்தில் முற்றாக நிறுத்தல். இதனால் பாதிக்கப்படும் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனத்தவர்களின் பாதுகாப்பை - மதத்தை பின்பற்றும் உரிமையை உறுதி செய்தல்.

சகல தோட்ட குடும்பங்களுக்கும் 7 பேர்சஸ் காணியும் தமக்கென வீடும் வழங்கல். 2015/16 இல் 50 வீடுகள் நிர்மாணிப்பு. இவை சிறுபான்மை மக்களுக்கு என குறிப்பிடப்பட்டுள்ள சில வாக்குறுதிகள். நீண்ட வருடங்களாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைகள் குறித்து தமிழர் தரப்பு பிரதிநிதிகள் எத்தனையோ தடவை அரசாங்கத்திற்கு எடுத்துரைத்துள்ளனர். மஹிந்தவின் பத்து ஆண்டு ஆட்சிக் காலத்தில் அது குறித்து எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை. போர் முடிவுற்றதன் பின்னரான கால கட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்திற்குமிடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றி பேசுவதை விடவும் அன்றாட, உடனடிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விடயங்கள் குறித்து அதிகம் பேசப்பட்டன. தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக, விசாரணை அல்லது விடுதலை என்ற முடிவினை அரசாங்கம் அப்போதே எடுத்திருக்கலாம். ஆனால், இப்போது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இதனை தெரிவித்திருப்பதை தமிழ் மக்கள் நம்புவதற்கு தயாராக இல்லை.

அதுவும் இந்த கைதிகளை விடுவிப்பது பற்றிக் கூறாமல் இவர்கள் குறித்து ஆராய குழு நியமனம் என்பது மேலும் காலத்தை இழுத்தடிப்பதாகவே அமையும். குறிப்பிட்ட காலத்திற்குள், இராணுவம் பயன்படுத்தும் காணிகள் கட்டடங்களை விடுவித்தல் என்பதும் கடந்த ஐந்தரை வருட காலத்தில் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால், மேலும் காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளே நடைபெற்றன. மதவாதக் குழுக்களால் ஏற்படுத்தப்படும் சமூகப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவது பற்றி குறிப்பிடுகின்ற அரசாங்கத்திற்கு முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் யார் என்று தெரிந்திருந்தும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. இன்று பெரும்பாலான முஸ்லிம் மக்கள் இந்த அரசாங்கத்தை வெறுப்பதற்கு இதுவே காரணம். தோட்டத் தொழிலாளர்களுக்கு 7 பேர்ச் காணியும் வீடும் தரப்படுவதாக இப்போது சொல்லப்பட்டுள்ளது. இதனைக்கூட அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருக்கலாம். எனவே, மஹிந்த அரசாங்கத்தின் தற்போதைய வாக்குறுதிகளை வாக்குகளைப் பெறுவதற்கான வாக்குறுதிகளாகவே தமிழ், முஸ்லிம் சிறுபான்மை மக்கள் கருதுகின்றனர்.

எதிரணியினர் தமிழ் முஸ்லிம் மக்களுக்கான எந்தவித உறுதிப்பாட்டையும் அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கவில்லை. எனினும், இன்றைய சர்வாதிகார நிலைமைகள் மாற்றப்பட்டு ஜனநாயக சூழல், சுயாதீனமான சட்டத்தின் ஆட்சி நிலை நாட்டப்படுமானால் அதுவே சில விடயங்களை செயற்படுத்த முதற்படியாக அமையும் என்கிற சிறு நம்பிக்கை மட்டுமே தமிழ் முஸ்லிம் சிறுபான்மை மக்களிடம் இப்போது உள்ளது. எல்லாவற்றிற்கும் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

**- ஆதித்தன் -**

விளம்பரம் VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com*

விளம்பரம் பத்திரிகை ‘விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்’ ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# 2015 இல் ஆதன வியாபாரத்தின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கலாம்?

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

**தொடர் -430**

பல ஆண்டுகளாக ஆதனத்தின் விலையிலும் வியாபாரத்திலும் அதிகரிப்பு ஏற்பட்டுக்கொண்டே வருகின்றது. இது அனேகரிற்கு நல்ல செய்தியாக உள்ளது. ஆனால் புதிதாக ஆதனம் வாங்குபவர் களிற்கு நெருக்கடியாக உள்ளது. எனினும் வழக்கம்போல வாங்குபவர்கள் வாங்கிக் கொண்டேயும் விற்பவர்கள் விற்றுக் கொண்டேயும் தான் இருகின்றனர். டிசெம்பர் நடுப்பகுதியில் கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் (Bank of Canada Governor) ஸ்ரீபன் பொலஷ் (Stephen Poloz) கனடிய ஆதனம் 30% இனால் அதிகமாகக் காணப்படுகின்றது என அபாயக்குரல் கொடுத்துள்ளார். இதேமாதிரியான செய்திகளை கடந்த 15 வருடங்களாக கேட்டுக்கொண்டும், பார்த்து கொண்டு தான் இருக்கின்றோம். 2015ஆம் ஆண்டு எவ்வாறு இருக்கலாம் என்ற முடிவிற்கு வரமுன்பு அதற்கான காரணங்கள் என்னவாக இருக்கலாம்.




**புத்தாண்டில் யாவரும் அனைத்து வளங்களும் பெற்று சீராக, சிறப்பாக, மன அமைதியாக, அன்பாக, ஆரோக்கியமாக வாழ இறைவனை வேண்டுவோம்.**

**1. 2015 இல் வட்டிவீதம்** (Interest rate)

கடந்த பல வருடங்களாக கனடியர்கள் குறைந்த வட்டிவீதத்தின் அனுகூலத்தை பாவித்து கொண்டே இருக்கின்றார்கள். இதே நிலைமையை 2015 இலும் எதிர்பார்க்கலாம். 2015 இல் மத்திய அரசிற்கான தேர்தல் ஆண்டு. எந்த காரணம் கொண்டு ஆதன வியாபாரத்தில் விழுக்காட்டை ஏற்படுத்த அரசு விரும்பாது அத்துடன் எரிபொருளின் அதிக விலை இறக்கம் வட்டிவீதத்தை அதிகரிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தாது.

**2. ரொறொன்ரோ பெரும்பாகத்தில்** (GTA) **நிர்மாணத்திற்கு போதியளவு நிலம் இல்லை.**

ரொறொன்ரோ பெரும்பாகத்தின் பெரும்பகுதி நிலம் பசுமைப்பகுதியாக (Green belt) பிரகடனப்படுத்தியதால் புதிதாக நிர்மாணம் செய்ய போதியளவு நிலம் கிடையாது. இதனாலேயே அடுக்குமாடிகளை அதிகமாக கட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. உலகில் மக்கள் வாழ விரும்பும் நகரங் களில் ரொறொன்ரோவும் முன்னணியில் உள்ளது. புதிதாக வருபவர்களிற்கு தங்குவதற்கு இடம் தேவைப்படுகின்றது.

கடந்த வருடத்திலும் (2014) நிலத்துடன் கூடிய வீடுகளின் விலையும் அதிகரிப்பே ஏற்பட்டுள்ளது.

குறிப்பு: இதனாலேயே கனடாவில் நிலத்துடன் கூடிய வீடுகளின் (low Rise) மிகப்பெரிய நிர்மாண நிறுவனமாகிய Mattamy Homes, அண்மையில் அடுக்கு மாடி மனை கட்டுவதில் நீண்டகாலம்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்


**HomeLife/GTA Realty Inc. Brokerage***

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

*Raja Mahendran*, P.Eng.
*Broker / Owner*



5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

* INDEPENDENTLY OWNED AND OPERATED

**CONDO FOR SALE**

**HWY 427 & DUNDAS (TORONTO WEST)**

**Brand new condo. for sale.**

5% down.
2 Bedrooms.
2 Washrooms.
Corner units.

**CONDO. FOR SALE**

Brand new condo. for sale.
Only 10% down.
Closing fall 2015.
Rental guarantee available.

**CONDO FOR RENT**

**YONGE & FINCH**

1 Bedroom condo for rent. 1 Parking.
Asking $1400.

**CONDO FOR SALE**

Brand new condo with rental guarantee. Only certain units available in Downtown Toronto. Close to CN Tower, Rogers center.
From $270k

**New condo projects By Tridel Special price**

.i. Islington & bloor
ii. Kennedy & 401
iii. AQUVASTA Project - lakeview

# வடக்கு கிழக்கில் வெள்ளம்

மார்கழியில் இருவாரமாக மட்டக்களப்பில் பெய்து கொண்டிருந்த தொடர்மழை காரணமாகவும் குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டமையினாலும் பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் பாதிப்புக்குள்ளான மக்கள் இடம் பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். இவ்வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட முகாம்களில் 12 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 41 ஆயிரம் பேர்களும், உறவினர் வீடுகளில் 38 ஆயிரம் குடும்பங்களைச்சேர்ந்த ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோரும் தஞ்சமடைந்துள்ளனர். தஞ்சமடைந்த முகாம்களிலுள்ள மக்களுக்கு அரசாங்கத்தின் அனர்த்த சேவைப்பிரிவு உணவுகளை மாத்திரம் வழங்கிக் கொண்டிருக்கிறது. திடீரென ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர உதவிகளை மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை கோருகின்றது.



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மக்களுக்கு சுவிஸ் அமைப்பு உதவி

பெருமழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பா. உறுப்பினர் சி.சிறீதரனின் வேண்டுகோளுக்கு இணங்க புலம்பெயர் உறவுகளின் அமைப்புகளில் ஒன்றான சுவிஸ் எழுகை அமைப்பு உலர் உணவுப் பொதிகளை வழங்கியுள்ளது. வெள்ளிக்கிழமை 26 டிசம்பர் 2014 இல் கிளிநொச்சி யூனியன்குளம், புதியகுடியிருப்பு மற்றும் கோணாவில் கிழக்கு போன்றவற்றில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட மக்களுக்கு சுவிஸ் எழுகை அமைப்பின் உலர் உணவு பொதிகளை பா. உறுப்பினர் சி. சிறீதரன் நேரடியாக சென்று மக்களிடம் கையளித்தார். மழையால் பாதிக்கப்பட்ட மக்கள் பொதிகளை பெற்றுக்கொண்டு சுவிஸ் எழுகை அமைப்புக்கும் அதன் நிர்வாகிகள் உறவுகளுக்கு தங்கள் நன்றியை தெரிவித்தனர்.

# பதுளையில் மண்சரிவு

பதுளையில் வெள்ளிக்கிழமை 26 டிசம்பர் 2014 இல் இடம்பெற்ற இருவேறு மண்சரிவுகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்வடைந்துள்ளது. மேலும் பதுளை, ரில்பொல, அங்தெனிய மற்றும் அதை அண்டிய பிரதேசங்களில் ஏற்பட்ட மண்சரிவுகளில் 10 பேரைக் காணவில்லை என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். பத்து பேரின் சடலங்கள் இதுவரையில் மீட்கப்பட்டுள்ளது. வீடுகளின் மீது பாரியளவில் மண் சரிந்து வீழ்ந்துள்ளது. இராணுவத்தினரும் மீட்புப் பணியில் இணைந்து கொண்டுள்ளனர்.

# அம்பாறை மாவட்டமும் வெள்ளத்தால் பாதிப்பு



தொடர்ந்து பெய்து வந்த அடைமழை காரணமாக அம்பாறை மாவட்டங்களின் பல பிரதேசங்கள் முற்றாக நீரில் மூழ்கிக்காணப்படுகின்றன. வீதிகள் எங்கும் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. அதனொரு கட்டமே பாண்டிருப்பில் உள்ள பல வீடுகள் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன. இங்கு குளிருடன் கூடிய காலநிலை தொடர்ந்து நீடிப்பதனால் முதியவர்களும், சிறார்களும் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்த மக்களை வெள்ள அனர்த்தத்தில் இருந்து ஓரளவிற்கேனும் மீட்கும் வகையில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கலையரசன், கல்முனை மாநகரசபை உறுப்பினர் அ. விஜயரட்ணம் மற்றும் கி.மா. சபை உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் பா. ச. புவிராஜா கொண்ட குழுவினர் பாண்டிருப்பு கிராமத்துக்குச் சென்று வீடுகளில் உள்ள வெள்ள நீரை வெளியேற்றும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிங்கப்பூர் விமானம் கடலில் விழுந்தது!

இந்தோனேசியாவில் இருந்து வெள்ளிக்கிழமை 26 டிசம்பர் 2014 காலை 155 பயணிகளுடன் சிங்கப்பூர் புறப்பட்ட ஏர் ஏசியா விமானம் திடீரென நடுவானில் தொடர்புகளை இழந்து கடலில் விழுந்தது. அதன் தகவல் தொடர்பு திடீரென துண்டிக்கப்பட்டதால் அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர். விபத்துக்குள்ளான அந்த விமானத்தைத் தேடும் பணியில் சிங்கப்பூர் விமானப்படையும் கடற்படையும் களமிறக்கப்பட்டது. விபத்துக்குள்ளான விமானத்தில் மொத்தம் நான்கரை மணி நேரம் வரை பறப்பதற்குத் தேவையான எரிபொருள்தான் இருந்ததாக கூறப்படுகிறது. சிங்கப்பூர் பயணிகள் விமானம் மோசமான வானிலை காரணமாக விபத்தில் சிக்கி கடலில் விழுந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. Borneo கடற்கரை அருகே விபத்திற்குள்ளான விமானத்தின் உடைந்த பாகங்களும் பல உடல்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த விமானம் பெலிடங் தீவிலிருந்து 80 முதல் 100கடல் மைல் தொலைவில் கடலில் விழுந்திருக்கலாம் என நம்பப்பட்டு அப்பகுதியில் தீவிர தேடுதல் நடந்து வந்தது. விமானம் அந்த பகுதியில் பறந்து கொண்டிருந்தபோது வானிலை மோசமாக இருந்தாக கூறப்பட்டது. சம்பந்தப்பட்ட விமானம் அக்கடல் பகுதியில் மின்னல் தாக்குதலிலிருந்து தப்பிக்க திசை மாறிச் சென்றதாக கூறப்படுகிறது.

எனவே வானிலை காரணமாக விமானம் கடலில் விழுந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அந்த விமானத்தில் மொத்தம் 162 பேர் இருந்துள்ளனர். அதில் 155 பேர் இந்தோனேசியர், 3 தென்கொரியர், மற்றும் மலேசியா, சிங்கப்பூர், இலண்டனைச் சேர்ந்த ஒவ்வொருவரும் பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த சக விமானியும் இருந்தனர்.

# ஒரே ஆண்டில் மலேசியா சம்பந்தப்பட்ட 3 ஆவது விமான விபத்து!

ஒரே ஆண்டில் மலேசியா தொடர்புடைய 3 ஆவது விபத்தாக வெள்ளிக்கிழமை டிசம்பர் 26, 2014 இன் இந்தோனேசிய விமான விபத்து அமைந்துள்ளது மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏர் ஏசியா நிறுவனம் மலேசியாவைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. தற்போது கடலில் விழுந்த விமானம் க்யூ இசட் 501 என்பதாகும். அதில் 162 பேர் இருந்தனர். ஜாவா கடலுக்கு மேல் பறந்து கொண்டிருந்த போது இது விபத்துக்குள்ளானது. மலேசியாவைச் சேர்ந்த டோனி பெர்னாண்ட்ஸ் என்பவர்தான் ஏர் ஏசியாவின் தலைவர் ஆவார். இப்பிராந்தியத்தில் மலிவு கட்டண விமான சேவையை ஏர் ஏசியா நடத்தி வருகிறது. இந்த நிறுவனத்தில் ஏர் ஏசியா இந்தோனேசியா நிறுவனத்திற்கு 49 சதவீத பங்குகள் உள்ளன. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஏர் ஏசியா பிரபலமானது. இந்தியாவிலும் இது சமீபத்தில் சேவையைத் தொடங்கியது. இதுவரை எந்த விபத்திலும் சிக்காத நிறுவனமாக ஏர் ஏசியா இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.


இதற்கு முன்பு இந்த ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி மலேசிய ஏர்லைன்ஸின் எம்எச் 370 விமானம் கோலாம்பூரிலிருந்து பெய்ஜிங்குக்கு 239 பேருடன் சென்று கொண்டிருந்தபோது காணாமல் போய் விட்டது. இதுவரை அந்த விமானம் என்ன ஆனது என்பது தெரியவே இல்லை. அது இந்தியப் பெருங்கடலில் விழுந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஆனால் இதுவரை விமான பாகம் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. பல நாடுகள் சேர்ந்து இந்தியப் பெருங்கடலில் தீவிர வேட்டை நடத்தியதை உலகமே சோகத்துடன் பார்த்தது. இடையில் தேடுதல் வேட்டை நிறுத்தப்பட்டு தற்போது மீண்டும் தொடங்கி நடந்து வருகிறது. ஆனால் இதுவரை விமானம் குறித்த ஒரு தகவலும் இல்லை.




கடந்த யூலை 17 ஆம் திகதி மலேசியா ஏர்லைன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த எம்எச் 17 விமானம் உக்ரைன் மீது பறந்து கொண்டிருந்த போது சுட்டு வீழ்த்தப்பட்டது. இந்த விமானம் ஆம்ஸ்டர்டாமிலிருந்து கோலாலம்பூர் வந்து கொண்டிருந்தது. அதில் பயணித்த 298 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த விமானத்தை ரஷ்ய ஆதரவு புரட்சிப் படையினர் சுட்டு வீழ்த்தியதாக ஒரு தகவலும் ரஷ்யப் படையினர் தான் சுட்டு வீழ்த்தியதாக இன்னொரு தகவலும் இருந்தது. புரட்சிப் படையினர் வசம் உள்ள பகுதிக்கு மேல் பறந்து கொண்டிருந்த போதுதான் இந்த விமானம் ஏவுகணைத் தாக்குதலுக்குள்ளானது. ஒரே வருடத்தில் மலேசியா தொடர்புடைய 3 ஆவது விமான விபத்தாக வெள்ளிக்கிழமை 28 டிசம்பர் 2014 காலை விபத்துக்குள்ளான விமானம் சேர்ந்திருப்பது மலேசிய மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. இம்மூன்று விமான விபத்துக்களில் 699 பேர் உயிரிழந்தோ காணாமலோ போயுள்ளனர்.

Sell your home

# FASTER MONEY





## ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC

**Direct 416 - 276-1225**

**Your home sold in 30 days or we buy it**

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Office: 905-470-9800
Fax: 905-470-7770

### Sheppard & Meadowvale




**3 Bedrooms, 2 W Rooms**
This Beautiful Townhouse Is In A High Demand Rough River Community

### Niagara Dr & Simcoe St North




**4 Bedrooms, 4 W Rooms**
PAll Brick And Stone Exterior. Hardwood Floors In Living/Dining Room

### Ellesmere/ Markham




**3 Bedrooms, 1 W Room**
Brick Bungalow In Demand Woburn Area Separate Side Entrance

### Wilson & Conlin




**1+1Bedrooms, 3 W Rooms**
Bathroom With HEATED FLOOR
The Heart Of A Growing Neighborhood

### Townline & Woodstream Ave




**4 Bedrooms, 3 W Rooms**
Over $30,000 In Upgrades Spent, Bruce Espresso Oak Staircase

### Conlin Rd/ Harmony Rd





**4+1 Bedrooms, 3 W Rooms**
Hardwood Floors, Spectacularly Large Kitchen W/ Massive Granite Counter

### 10th Line/Hoover Park Drive





**4 Bedrooms, 3 W Rooms**
Absolutely Gorgeous Full Brick & Stone 4 Yrs New
Dir Access To 2 Car Grge.

### Mccowan/Bur Oak




**4 Bedrooms, 4 W Rooms**
Oversize-Garage, Double Driveway
Upgraded KITCHEN CABINET

### Markham Rd/Finch Ave




**3+1 Bedrooms, 2 W Rooms**
FINISHED BASEMENT
Ideal For Family With Small Children,

### Coldstream/Ormond




**4 Bedrooms, 3 W Rooms**
Eat-In Kitchen With Upgraded Kitchenaid Ss Appliances

### Markham Road & Steeles Ave E




**4 Bedrooms, 3 W Rooms**
Beautiful Detached 2 Garaged Home
Easy Access To T.T.C Buses

### 14th Ave / 9th Line




**4 Bedrooms, 4 W Rooms**
9' Ceilings And HARDWOOD FLOOR
ALARM SYSTEM /Video Camera Around House

### Bayly & Audley By The Lake




**3 Bedrooms, 4 W Rooms**
Open Layout With Spacious Rooms, Breakfast Area And Family Room With Gas Fireplace

### 9th Line / 16th Ave




**3+2 Bedrooms, 3 W Rooms**
Renovated Kitchen With Stainless Steel Appliances

### Fincham & 16th




**4 Bedrooms, 3 W Rooms**
Open Foyer With Spiral Oak Staircase And Ceramic Flr. Spacious, Bright Kitchen With B/Fast Area

### Bethesda & 10th Line




**4 Bedrooms, 5 W Rooms**
Over 5000 Sq Ft Sits On 1.04 Acres Backing To Sleepy Hollow Golf Course
Finished W/O BsmtW/ Bar, Gas Fireplace

KZG 647-200-5833

I can also assist your Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# வீடுகள் வாங்க விற்க......




**MORNINGSIDE & SHEPPARD**
Bedrooms: 4 + 2
Washrooms: 4




**BRIMLEY & LAWRENCE**
Bedrooms: 3 + 3
Washrooms: 2




**EGLINTON & BELLAMY**
Bedrooms: 3 + 2
Washrooms: 2




**BIRCHMOUNT & FINCH**
Bedrooms: 3 + 1
Washrooms: 4




**MCCOWAN & DENISON**
Bedrooms: 4 + 3
Washrooms: 5




**KENNEDY& HIGHGLEN**
Bedrooms: 4 + 3
Washrooms: 4

என்னிடம் வீடு வாங்குபவர்களுக்கு இலங்கை அல்லது கியூபா சென்று வர எந்த வித குழுக்கழுமின்றி இலவச விமானச்சீட்டு வழங்கப்படும்

***My listing Commission $3500***



**Lourdson Antonipillai**
Sales Representative
**Dir: 416.738.8824**
E-mail - lourdson29@hotmail.com
**HomeLife / Future Realty Inc., Brokerage***
205 - 7 Eastvale Dr. Markham. ON L3S 4N8
Bus:905.201.9977
Fax: 905.201.9229

HOMELIFE HIGHER STANDARDS

• Independently Owned & Operated

# 2015 இல்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

வியாபாரத்தில் இருக்கும் Monarch Corporation ஐ $330 மில்லியன் டொலரிற்கு வாங்கியுள்ளது.

**3. உலகளாவிய ரீதியில் கனடிய ஆதனவிலை குறைவாகவே காணப்படுகின்றது.**

உலகளாவிய பெரிய நகரங்களில் நியூயோர்க், ஹொங்கொங், ரோக்கியோ, (Tokyo), மும்பாய் (Mumbay), இலண்டன் ஆகியவற்றின் ஆதன விலையுடன் ஒப்பிடும்போது ரொறொன்ரோ, வன்கூவரின் விலை குறைவாகவே காணப்படுகின்றது. இதனாலேயே வெளிநாட்டவர் பலர் இங்கு முதலிட விரும்புகின்றார்கள். தமது பிள்ளைகள் தங்கி படிப்பதற்கும், முதலிடுவதற்கும், சிறந்த நகரங்களாக கருதுகிறார்கள். (Toronto இல் அடுக்குமாடி கட்டிடத்தில் வெளிநாட்டவரின் முதலீடு 2.4%) ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் முதலீடு 4.3%)

ரொறொன்ரோவில் இரண்டாவது நில மாற்று வரியும் கொடுப்பனவு செய்ய வேண்டியுள்ளது. இக்காரணமும், பலர் இருக்கும் வீட்டை திருத்தியும், அகட்டியும், பெரிதாக்கியும் அங்கேயே வாழ விரும்புகின்றார்கள். இதனால் புதிதாக சந்தைக்கு வரும் வீடுகளின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. இதே நிலைப்பாடு எதிர்காலத்திலும் (2015) காணப்படலாம்.

**5. விலையில் இறக்கம் ஏற்பட்டாலும் பெரிதாக இருக்காது.**

வீட்டு விலை 30% இனால் அதிகமாக காணப்பட்டாலும் விலை இறக்கம் பெரிதாக ஏற்படாது என்பதனை கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் ஏற்றுக் கொண்டேயுள்ளார். 30% என்பது பெரியளவு ஆனாலும் அவரே இறக்கம் பெரிதாக இருக்காது. (Soft landing) என்பதனை ஒத்துக் கொள்கிறார் எனின், பெரிய மாற்றம் ஏற்படாது என்பதே அதன் கருத்தாக இருக்கலாம். அத்துடன் அவ்வாறான நிலையை ஏற்படுத்த விரும்பவில்லை என்பதனையும் தெரியப்படுத்த விரும்புகிறாரா?



4. GTA பகுதியில் சந்தையில் விற்பனைக்கு இருக்கும் ஆதனத்தின் எண்ணிக்கை குறைவு.

ரொறொன்ரோ பெரும்பாகத்தில் குறைந்தளவு ஆதனங்களே சந்தையில் விற்பனைக்கு வந்து கொண்டு இருக்கின்றது. இதனால் சில குறிப்பிட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் ஆதனத்தை வாங்குவதற்காக போட்டி போடுகின்றார்கள். இந்நிலைமை கடந்த பல வருடங்களாக நடைபெற்று வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. விற்று வாங்குவதால், ஏற்படும் செலவு மேலும்

உங்களால் 2015 இல் ஆதன முதலீட்டில் இறங்க முடியுமாயின் சரியான சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதனைப் பாவிப்பது சரியாக இருக்கலாம். இது முதலீடு மட்டுமல்ல. வாழ்வதற்கும் குடும்பத்தை உருவாக்குவதற்குமான ஆலயம். நாம் உலகில் உள்ள சிறந்த நகரங்களில் ஒன்றில் வாழ்கின்றோம்.

**2015 மற்றுமொரு சிறந்த ஆண்டாக அமையட்டும்.**


## COMMERCIAL UNITS FOR SALE

Main Floor. Retail commercial. Units for quick sale in a reputable. Indoor mall. Tenented. Vacant position Possible. Price included one parking. Heart of scarborough. Close to all amenities. Only a few units available for your business. Only $148,888. (Don't miss)

**Pl. call: 416.315.9397**



**Computek College**

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Registered as a private career college under the Private Career Colleges Act, 2005

Enroll in a Diploma Course and receive a FREE Laptop

(Offer valid until Jan 31, 2015 - Some Conditions apply)



Markham Campus Students receiving Free Laptops



Scarborough Campus Students receiving Free Laptops

SECOND CAREER,
SOCIAL ASSISTANCE RECEIPIENTS, NEW IMMIGRANTS, UNEMPLOYED/ UNDEREMPLOYED CLIENTS WELCOME!

DIPLOMA COURSES

| | |
|---|---|
| Enterprise Network Engineering | 50 wks |
| Community Services Worker | 50 wks |
| Int. Application Development | 50 wks |
| Early Childcare Assistant | 38 wks |
| Accounting & Payroll Admin | 35 wks |
| Network Engineering | 35 wks |
| Personal Support Worker | 32 wks |
| Medical Office Admin | 28 wks |
| Computerized Accounting | 26 wks |
| Business Administration | 26 wks |

PART-TIME COURSES* (WEEKEND / EVENING)

Bank Teller, MS Office
Food Handler, Food Service Worker
AccPac, Simply Accounting, Quick books
Exam Prep: A+, MCSA, MCSE
ICDN 1, ICDN 2, Canadian Securities Course
C/C++, C#, Java, VB.net, HTML, SQL
Medical Coding & Billing
CPR & First Aid

* These programs do not require approval under the Private Career Colleges Act, 2005

WWW.COMPUTEK.EDU

Financial assistance may be available for those who qualify

Toronto Campus 301-2347, Kennedy Rd (Kennedy/Sheppard) 416-321-9911
Markham Campus 202 - 7 Eastvale Drive. (Markham / Steeles) 905-471-3344
Scarborough Campus 248-2390 Eglinton Ave E Kennedy/Eglinton) 416-285-9941

# பத்திரகாளி சோதிட நிலையம்

# BADRAKALLI ASTROLOGY CENTER




## Pandit Sri Hanuman

Kerala (Choddankiri)

# 416.846.2798

## 100% Guaranteed Result



The Pandith can read the Past, Present & Future by Hand prediction, name, date of birth relating to love, education, marriage, money. I will help in all problems and work with god and holy spirit. Are you suffering in silence and nobody knows your pain or sorrow, but you and god know. Well you are not alone, the holy spirit will guide you tome and convince you. I will remove and destroy all bad, witchcraft, jealously and black magic permanently with superior strength & holy given power to protect to you and your family from evil things.

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்ஜனர் பண்டித் **Pandit Sri Hanuman** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்.

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமை இலவசமாக நூல் கட்டப்படும்.

- கைரேகை
- நாம நட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- பெண் பிள்ளைகள் – பெற்றார் பிரச்சனைகள்
- திருமணயோகம்
- குழந்தை பாக்கியம்
- கணவன் – மனைவி ஒற்றுமையின்மை
- எதிரிகள் கண்ணூறு, நாவூறு
- சர்ப்பதோஷம்
- கர்ப்பதோஷம்
- கஷ்ட – நஷ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்றுகூடுதல்

- Business Investments
- Jealousy
- Childless Couples
- Depression
- Worries About Loved Ones
- Enemy Problems
- Money Problems
- Sexual Problems
- Love Problems
- House Protection
- Work Problems
- Money Blessing
- Family Arguments
- Drinking Problems

பிளைக் மெஜிக் அகற்றி பாதுகாப்புக் கொடுக்கப்படும்.

**5215 Finch Ave. East, Unit #257, Upstairs, Scarborough ON M1S 0C2**

**GTA Square Mall (2nd Floor) (Middlefield & Finch)**

# அன்புடைமை - 9




திருவள்ளுவரின் 79வது குறளில் இருந்தே இந்த இதழின் தொடர்கட்டுரையை ஆரம்பிப்போம்.

"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு"

இந்தக் குறளிற்குப் பரிமேலழகர் 'இல்லறத்திற்கு உறுப்பாகிய அன்புடையர் அல்லாதார்க்கு ஏனைப் புறத்தின்கண் நின்று உறுப்பாவன எல்லாம் அவ்வறஞ்செய்தற் கண் என்ன உதவியைச் செய்யும்?' என்றவாறு பொருள் உரைத்துள்ளார். 'அன்பு என்னும் அகத்து உறுப்பு இல்லாதவர்க்குப் புறத்து உறுப்புக்கள் அழகாக இருந்து என்ன பயன்?' என்று கலைஞர் இதற்கு விளக்கம் கொடுத்துள்ளார். 'உடம்பின் அகத்து உறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு உடம்பின் புறத்து உறுப்புக்கள் எல்லாம் என்ன பயன் செய்யும்' என்று மு.வ விளக்கம் கொடுத்துள்ளார். 'உள்ளத்திலே அன்பு இல்லாதவர்க்கு, வெளி உறுப்புக்களால் பயன் இல்லை' என்று சாமி சிதம்பரனார் விளக்கம் கொடுத்துள்ளார். உள்ளத்தில் அன்பு இருக்க வேண்டும். அன்பு இல்லாதவிடத்து புறத்து உறுப்புக்களால் பயன் இல்லை என்ற கருத்து இந்தக் குறளில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கவிநாயகர் வி.கந்தவனம் அவர்கள் தனது 'காதல் வாழ்க்கை' என்ற நூலில் அன்பர்களே என்று மற்றவர்களை நோக்கி விளித்து கூறும்பொழுது உள்ளத்தில் மகிழ்ச்சி வயப்பட்ட உணர்ச்சி ஊற்றெடுக்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார். அவர் ஒரு புகழ்பெற்ற மேடைப் பேச்சாளர். அவர் பேச ஆரம்பிக்கையில் அன்பர்களே என்று அழகாக அவையோரை விளித்துக் கூறுவதை நான் அவதானித்திருக்கின்றேன். அவர் மேலும் 'அன்புக்கு இணை இந்த உலகத்தில் எதுவுமே இல்லை' என்றும் குறிப்பிடுகின்றார். அன்பிற்குள்ள வலிமையை இது எடுத்துக் காட்டுகின்றது. அன்பினால் மக்களைக் கட்டிப் போட்டு விடலாம் என்ற பொதுவான உலகறிந்த உண்மையை நாமெல்லாரும் அறிவோம். அன்புடைமை என்ற ஆறு வற்றினால் வெறுப்பு என்ற வரண்ட நிலம்தான் மிஞ்சும்.

அன்பின் பல்வேறு வடிவங்களைப் பார்ப்போம். பாசம், காதல், நட்பு, பத்தி (பக்தி), அருள், கருணை, இரக்கம், பரிவு விருப்பம், நேசம், பற்று என்று இவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம். உலகத்தில் மிகவும் உன்னதமான உறவாக தாயன்பு கருதப்படுகின்றது. அன்பு என்ற சொல்லை உயர்நிலைக்கு எடுத்துச் செல்கின்றது தாயன்பு. உலகத்தில் பலருக்கும் கிடைக்கின்ற தாயன்பு சில குழந்தைகளுக்கு கிடைக்காமலே போய் விடுகின்றது. உலகத்தில் பல குழந்தைள் அனாதைகளாக வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலை மிகவும் துன்பத்திற்குரியது. இந்த நிலை மாற வேண்டும். இந்த உலகத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் தாயன்பு முழுமையாகக் கிடைக்க வேண்டும். குடும்பம் ஒரு கோயில் என்ற முதுமொழியை நாம் அறிவோம். இரத்த உறவுகளுக்கிடையே பகிர்ந்திடும் அன்பு பாசம் என்ற பெயரால் போற்றப்படுகின்றது. பல சினிமாப்படங்களில் கூட பாசம் என்ற உறவை அழகாக சித்தரித்துள்ளார்கள். அன்புடைமை என்ற உன்னதமான சொத்து என்ன வடிவத்தில் இருந்தாலும் சிறப்பாகத்தான் இருக்கும்.

அன்னை திரேசா அன்பினைப் பொழிந்து உலகில் உன்னதமான சேவையாளராகத் திகழ்ந்தார். எந்த சுயநலமும் இன்றி தன் வாழ்நாள் முழுவதும் கலங்கரை விளக்காக பலரின் வாழ்வில் ஒளியூட்டினார். அன்பு என்றதும் அம்மா என்ற உறவு நினைவுக்கு வருவது போன்று இந்த உலகத்தில் அன்னை திரேசா என்ற உன்னதமான சேவையாளரின் பெயரும் நினைவுக்கு வந்து விடுகின்றது.

ஒரு குடும்பத்தின் உறுப்பினர்களுக்கிடையே உள்ள அன்புப் பகிர்வு மிகவும் முக்கிய மானது. ஒவ்வொரு உறுப்பினரும் அடிக்கடி சுயமதிப்பீடு செய்யப்பட வேண்டிய விடயம் நாம் எல்லோருடனும் குடும்பத்தில் அன்பாக இருக்கின்றோமா என்பதே. அப்பொழுதுதான் குடும்பத்தில் அமைதி நிலவும். கணவன் மனைவிக்கிடையில் விட்டுக் கொடுப்பு அவசியம் என்று கூறுவார்கள். அன்புடைமை என்ற சொத்து இருக்கும் பொழுது விட்டுக் கொடுத்து வாழ்வது இலகுவாக இருக்கும். குடும்பப் பிரிவுகள் அதிகரித்துச் செல்வது வேதனைக்குரியது. இதனால் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் பிள்ளை கள். பிள்ளைகளின் வருங்காலத்தை நினைத்தாவது பிரிவைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இந்தக் கட்டுரை எழுத வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவதற்கு குடும்பங்கள் பிரிவின்றி மகிழ்ச்சியாக இருப்பதற்கும் இந்தக் கட்டுரை துணைநிற்கும் என்ற காரணமே முதன்மையானது. நாம் எதிர் கொள்ளும் வேற்றுமைகள் தற்காலிகமானது என்ற உணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மனம் தளராது அன்புடைமையை சொத்தாகக் கொண்டு வேற்றுமைகளை நீடிக்க விடாது களைந்து விட வேண்டும். பெரிய விடயமாக இருப்பது பேசித் தீர்க்கும் பொழுது அற்ப விடயமாக மாறிவிடும்.

இந்தச் சிறிய விடயத்திற்காகவா இவ்வளவு தூரம் வேற்றுமை காட்டினோம் என நினைக்கத் தோன்றும். நாம் ஒரு குடும்பத்தவர். எந்த நிலைமையிலும் நாம் ஒன்றாக வாழ வேண்டியவர்கள் என்ற உணர்வோடு பிரச்சினைகளை அணுக வேண்டும். அன்பு என்ற உன்னதமான உணர்வைப் பலமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். குடும்பத்தில் நிலவும் எல்லாப் பிரச்சினைகளும் ஒரே மாதிரி யானவை அல்ல. சில நேரங்களில் பிரிவு தவிர்க்க முடியாத விடயமாக இருப்பதையும் காணலாம். பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே நல்ல முறையில் அணுகி தீர்த்துக் கொண்டால் பாதிப்புக்களைத் தவிர்க்கலாம்.

இல்லற வாழ்க்கையில் தம்பதியினர்க் கிடையே கணவன் மனைவிக்கிடையே உள்ள அன்பு என்றோ அல்லது காதல் என்றோ வடிவம் கொடுத்தாலும் ஒன்றுதான். இருவரும் அன்புடைமை கொண்டு வாழ்ந்தால் வாழ்வு மலரும். இல்லற வாழ்க்கையில் மகிழ்ச்சி இருக்கும். இந்தக் கட்டுரையை ஒரு ஆங்கிலப் புத்தாண்டில் வாசிக்கிறீர்கள். அன்புடைமை கொண்டு வாழ்வோம் என்று உறுதியெடுத்துக்



கொள்ளுங்கள். சில விடயங்களை இலகுவாகக் கூறிவிடலாம். செயன்முறையில் கடினமாக இருக்கும். எம்மால் முடிந்தவரை அன்பினைப் பகிர்ந்து இன்பமுற வாழ்வோம். வாசகர்களாகிய உங்கள் அனைவர்க்கும் அன்பு நிறைந்த ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடைமை பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.
நன்றி. வணக்கம்.

தொடரும்...



- அகணி -
authorakani@yahoo.com

# 2015 இல்...

## 01ஆம் பக்கத்தொடர்ச்சி

அல்ல, கனடா உட்பட உலகில் உள்ள பல நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும். கனேடிய டொலரின் பெறுமதிக் குறைவு மட்டுமே கனடாவின் ஏற்றுமதியின் 7% உயர்வுக்கு காரணம். கனடாவின் ஏற்றுமதியில் 70% அமெரிக்காவிற்கே செல்கிறது. இதனால் கனேடிய ஏற்றுமதிப்பொருட்களான இயந்திரயங்கள், மின்சார உபகரணங்கள், விண்வெளி உபகரணங்கள் மற்றும் நுகர்வோர் பொருட்கள் என்பவற்றின் ஏற்றுமதியின் அளவு 2014 இன் இறுதியில் இரண்டு மடங்காகிவிட்டன.

அமெரிக்க பொருளதாரத்தின் அபரித வளர்ச்சி ஏற்கனவே பெருகிவழிந்து (Spillover) கனடாவிற்கு வந்ததாலேயே கனடாவின் ஒருமாத மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 0.3% ஆல் அதிகரித்தது. கனேடிய பொருளாதார வல்லுநர் இவ்வளர்ச்சி 0.1% ஆகவே இருக்கும் என எதிர்வு கூறியிருந்தனர். அவர்கள் அமெரிக்க பொருளாதார வளர்ச்சியின்வேகம் இவ்வளவு விரைவில் பெருகிவழிந்து கனடாவிற்கு வரும் என எதிர்பார்த்திருக்கவில்லை.

அமெரிக்காவில் Gas இன் விலை கடந்த கோடைகாலத்தில் இருந்ததை விட கலன் ஒன்றுக்கு $1 குறைவாக இருக்கிறது.



இதனால் அமெரிக்க பாவனையாளர்கள் வருடம் $380 ஐ சேமிப்பார்கள் என அமெரிக்க ஆய்வாளர்அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது. இந்த Gas விலை குறைப்பின் விளைவு மட்டுமே அமெரிக்க மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) 1% அதிகரிப்பிற்கு காரணமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவின் 2015 இன் GDP 3% ஆக இருக்கும் என தற்போது எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உருவாகிய புதிய வேலைகளின் எண்ணிகையும் கடந்த மூன்று வருடங்களை விட இவ்வருடம் அதிகமாக உள்ளது. இவ்வாறான அமெரிக்க பொருளாதாரத்தின் அபரித வளர்ச்சி கனடாவின் பொருளாதார வளர்ச்சிக்கு அடுத்த ஆண்டில் உதவும் என குளோப் அன்ட் மெயில் தெரிவித்துள்ளது.


கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

# அலர்ஜியால் அவஸ்தையா? இதோ வகையான தீர்வு?

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

இன்றைய நாகரிக வாழ்க்கையில் நமக்கு தெரிந்தோ, தெரியாமலோ நமது உடலுக்கு ஒவ்வாத பொருட்கள் உண்ணும் உணவின் வழியாகவோ, தோலின் வழியாகவோ நம் உடலில் சேர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. ஏன் இந்த நோய் வந்தது என்று தெரியாமலே நாமும் தினமும் நோயுடன் போரிட்டுக் கொண்டுதான் இருக்கிறோம்.

கிராமம் முதல் நகரம் வரை வாகனம் இல்லாது வாழ்க்கை இல்லை என்ற நிலை உருவாகிவிட்டது. எங்கும் வாகனங்களின் இரைச்சல். இதன் பரிசாக நமக்கு கிடைத்தது என்னவென்று யாரேனும் யோசித்தோமா? அதுதான் மாசடைந்த காற்று. பெருகிவரும் தொழிற்சாலைகளின் கழிவு நீரால் நீர் நிலைகள் அசுத்த மடைகின்றன. அது மட்டும்தானா அதிக விளைச்சலுக்காக பயன்படுத்தும் செயற்கை உரவகைகள் மற்றும் இரசாயனப் பொருட்கள் என்பனவாம். இவை தானியங்கள், பழவகைகள் என்பனவற்றின் இயல்பான குணங்களையே மாற்றி விடுகின்றன.




1. உடலுக்கு ஒவ்வாத பொருட்களால் அலர்ஜி உண்டாவது யாவரும் அறிந்ததே. இத்தகைய அலர்ஜியால் பெரும் பாலோருக்கு ஆஸ்துமா (Ashma) மற்றும் தோல் நோய்கள் என்பன உண்டாகின்றன.

2. இவையன்றி ஒவ்வொருவருக்கும் இயல்பாகவே சில பொருட்கள் ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றது. அவை பற்றிப் பார்ப்போம்.

3. அலர்ஜி ஒவ்வாமை உருவாக குறிப்பிட்ட வயது வரம்பு ஏதுமில்லை. எந்த வயதிலும் உருவாகலாம்.

### அலர்ஜி தோன்றும் இடங்கள்

நம் உடலின் ஐம்பொறிகளான தோல், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றில் அலர்ஜியின் குறி குணங்களைக் காணலாம்.



- தும்மல், மூக்கிலிருந்து நீர்வடிதல், மூச்சுவிட சிரமம்.
- அசுத்தமான நீரில் குளித்தல், அசுத்த மான ஆடை அணிதல், கையுறைகளை (Glows) அதிகம் பாவித்தல் என்பன தோலில் அரிப்பு, தடிப்பு போன்ற அலர்ஜியை ஏற்படுத்தும். அத்துடன் சூரிய ஒளி அதிகமாக உடலில் படும்போது சிலருக்கு தோலில் அரிப்பு, சிறு கொப்பளங்கள், தோல் கறுத்தல் என்பன உண்டாகும். அதுமட்டுமன்றி சிலவகை மீன்கள், ஆட்டுப்பால், பன்றி இறைச்சி போன்றவற்றை உண்பதாலும் தோலில் அலர்ஜி ஏற்பட வாய்ப்புண்டு.

இவற்றால் மட்டுமன்றி பரம்பரை வழியாகவும் அலர்ஜி ஏற்படும். உதாரணமாக பெற்றோர்கள் அலர்ஜி நோயால் பாதிக்கப்பட்டிருந்தால் குழந்தைகளும் பாதிக்கப்படலாம். பொதுவாக பெண்களை விட ஆண்கள் தான் அலர்ஜியால் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். செல்லப் பிராணிகளான நாய், பூனை ஆகியவற்றை வீட்டில் வளர்ப்பதால் அவற்றிலிருந்து வெளிவரும் அலர்ஜி பொருட்களால் அலர்ஜி உண்டாகும்.

### அலர்ஜியை கண்டறியும் வழிகள்

அலர்ஜிக்கான இரத்தப் பரிசோதனை செய்து ஒவ்வொருவருக்கும் இருக்கும் அலர்ஜிக்கான பொருளைக் கண்டறிந்து அதனைத் தவிர்க்கலாம்.

### அலர்ஜியைத் தடுக்கும் வழிகள்

1. குழந்தைப் பருவத்தில் அதிகப்படியான பசுப்பாலை தவிர்த்து கூடுதலாகத் தாய்ப்பாலைத் தருவதால் குழந்தைகளின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாகி அலர்ஜி வராமல் தடுக்கிறது.

2. கர்ப்ப காலத்தில் கர்ப்பிணிப் பெண்கள் அலர்ஜியை ஏற்படுத்தும் உணவுகளான கத்தரி, கருவாடு போன்றவற்றையும் மற்றும் முட்டை, கடலை வகைகள், சோயா என்பனவற்றையும் தவிர்ப்பதால் குழந்தை களுக்கு வரும் அலர்ஜி, அரிப்பு, தடிப்பு கொப்பளம் போன்றவற்றை வராமல் தடுக்கலாம்.

3. விற்றமின் A,C,E மற்றும் கல்சியம் சத்துகள் அடங்கிய பழவகைகள், காய்கறிகள் உணவில் அதிகம் சேர்த்துக் கொள்வதன் மூலம் அலர்ஜி வராது தடுக்கலாம்.

4. இலைதளிர்காலத்திலுள்ள (Spring) காற்றில் கலந்திருக்கும் மலர்களின் மகரந்தம் மற்றும் மாசடைந்த தூசு என்பன மூக்கின் வழியாகச் சென்று பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதால் அந்தக் காலத்தில் வெளியில் நடமாடுவதை முடிந்தவரை தவிர்க்க வேண்டும். முடிந்தால் மூக்குமூடி (Mask) அணியலாம்.

5. குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் போன்றவற்றை தவிர்க்கலாம். அவை தொண்டையில் சளி கட்டக் கூடிய நிலையை உருவாக்கும்.

## அலர்ஜிக்கு யோகா மூலம் முற்றுப்புள்ளி

யோகாவிலுள்ள சில ஆசனங்கள் இரத்தத்தை சுத்திகரித்து நுரையீரலிலுள்ள (lungs) சளியை முழுமையாக வெளியேற்றும் தன்மை கொண்டன. அத்துடன் தோலில் உண்டாகும் பாதிப்புகளை இல்லாது செய்ய உதவுகிறது. அவையான

## விபரீதகரணி

இந்த ஆசனம் உடலில் விபரீதமான சிறந்த மாற்றங்களுடன் கூடிய பலன்களைத் தருவதுடன் தோல் அலர்ஜியை குணமாக்குகின்றது.

## புஜங்காசனம்

இந்த ஆசனம் சுவாச உறுப்புக்களை நமக்கு விரிந்து சுருங்கும் நிலையில் வைத்திருப்பதுடன் நுரையீரலுக்கு உறுதியை கொடுத்து மூச்சு மண்டலங்களைச் சீராக்கும் சக்தி வாய்ந்தது.



## கபாலபாதி மூச்சுப்பயிற்சி

இந்த மூச்சுப்பயிற்சி நுரையீரலிலிருந்து தலைப்பகுதி வரையிலுமுள்ள மூச்சுக் குழாய்களை நன்கு சுத்தம் செய்வதுடன் மூக்கிலிருந்து மூலாதாரம் வரையிலுமுள்ள கழிவுப்பொருட்களை வெளியேற்றி இராஜ உறுப்புக்களாவ; கல்லீரல், சிறுநீரகம், இருதயம், நுரையீரல், மண்ணீரல் போன்றவற்றை செம்மைப்படுத்தி அவற்றை சீராக்குகின்றது. இதனால் எந்தவிதமான அலர்ஜியானாலும் அது முற்றாகக் குணமடைய வாய்ப்புள்ளது.


ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.
நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# ஜெயமோகனுக்கு இயல் விருது - 2014

கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் வருடாந்திர இயல் விருது இவ்வருடம் (2014) திரு. பா. ஜெயமோகன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. சமகாலத்தில் 'எழுத்து அசுரன்' என்று வர்ணிக்கப்படும் இவர் புதினங்கள், சிறுகதைகள், அரசியல், வாழ்க்கை வரலாறு, காப்பியம், இலக்கியத் திறனாய்வு, பழந்தமிழ் இலக்கியம், மொழியாக்கம், அனுபவம், தத்துவம், ஆன்மீகம், பண்பாடு, திரைப்படம் என தமிழ் இலக்கியத்தின் அனைத்துத் துறைகளிலும் தனது எழுத்தின் மூலம் ஆழமான முத்திரையை தொடர்ந்து பதித்து வருகிறார். இந்த விருதைப் பெறும் 16வது எழுத்தாளர் இவராவர். இதற்கு முன்னர் சுந்தரராமசாமி, வெங்கட் சாமிநாதன், ஜோர்ஜ் ஹார்ட், ஐராவதம் மகாதேவன், அம்பை, எஸ். பொன்னுத்துரை, எஸ். ராமகிருஷ்ணன், நாஞ்சில்நாடன், சு. தியடோர் பாஸ்கரன், டொமினிக் ஜீவா போன்றவர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டிருக்கிறது.

ஜெயமோகன் 1962 ல் அருமனையில் (கன்னியாகுமரி) பிறந்தார். நாகர்கோயில் பயோனியர் குமாரசாமிக் கல்லூரியில் வணிகவியல் இளங்கலை படிப்பை பாதியிலே விட்டுவிட்டு இந்தியா முழுவதும் இரண்டு வருடமாக அலைந்து வாழ்க்கையை கற்றுக்கொண்டார். 1984ல் கேரளத்தில் காசர்கோடு தொலைபேசி நிலையத்தில் தற்காலிக ஊழியராக வேலைக்குச் சேர்ந்தார். எழுத்தாளர் சுந்தர ராமசாமியால் ஆற்றுப்படுத்தப்பட்டு தமிழ் இலக்கியத்துக்குள் நுழைந்தார். 1987ல் அவர் எழுதிய 'நதி' சிறுகதை முதன்முறையாக கணையாழியில் பிரசுரமாகி அவர் எழுத்து வாழ்க்கையை ஆரம்பித்து வைத்தது. இவருடைய 'விஷ்ணுபுரம்' நாவல் பரவலான வாசகர்களை அடைந்து பெரும் புகழ்பெற்றது. அதைத் தொடர்ந்து காடு, ஏழாம் உலகம், கொற்றவை, வெள்ளை யானை ஆகிய 13 நாவல்களையும், 11 சிறுகதை தொகுப்புகளையும், 50



கட்டுரை நூல்களையும் இதுவரை எழுதியிருக்கிறார். 1990 ஆண்டு அகிலன் நினைவுப்போட்டிப் பரிசு, 1992 ஆண்டுக்கான கதா விருது, 1994 ஆண்டுக்கான சம்ஸ்கிருதி சம்மான் தேசியவிருது, 2008 ஆண்டு பாவலர் விருது, 2011 ஆண்டு 'அறம்' சிறுகதைத் தொகுதிக்காக முகம் விருது, ஆகிய வற்றைப் பெற்றிருக்கிறார். ஜெயமோகன் பங்கேற்று வெளிவந்த திரைப்படங்கள் கஸ்தூரிமான், நான் கடவுள், அங்காடித்தெரு, நீர்ப்பறவை, ஒழிமுறி, கடல், ஆறு மெழுகுவர்த்திகள், காஞ்சி, காவியத்தலைவன் ஆகியவை பெரும் வெற்றியீட்டின.

1998 முதல் 2004 வரை "சொல் புதிது" என்ற சிற்றிதழை நண்பர்களுடன் இணைந்து நடத்தினார். 2010 ஆம் ஆண்டு முதல் இவரது படைப்பான விஷ்ணுபுரம் பெயரால் 'விஷ்ணுபுரம் இலக்கிய வட்டம்' இலக்கிய ஆளுமைகளுக்கு விருது அளித்து வருகிறது. அபூர்வமான சொல்லழகும், பொருள் செறிவும் கொழிக்கும் மொழியில் 2014 புத்தாண்டின் முதல்நாள் தொடங்கி மகாபாரதத்தின் மறு ஆக்கமாக இவர் தற்போது இணையத்தில் 'வெண்முரசு' நாவலை. ஒவ்வொரு நாளும் ஓர் அத்தியாயம் எனப் பத்தாண்டுகள் திட்டமிட்டு, எழுதி வருகிறார். ஏறக்குறைய நாற்பது நாவல்களாக இது நிறைவுபெறும். தமிழில் வேறு யாருமே முயன்றிராத பிரம்மாண்டமான பணி இது.

இவருடைய மனைவி அருண்மொழி நங்கை, மகன் அஜிதன், மகள் சைதன்யாவுடன் நாகர்கோவிலில் வசித்து வருகிறார். 'இயல் விருது' கேடயமும், 2500 டொலர் பணப்பரிசும் கொண்டது. விருது வழங்கும் விழா ரொறொன்ரோவில் 2015 ஜூன் மாதம் வழமைபோல நடைபெறும்.



# விளையாட்டுத் தகவல்கள் 358

## ரியல் மாட்ரிட் அணி சாம்பியன்

'கிளப்' அணிகளுக்கு இடையிலான 'பிபா' உலக கோப்பை கால்பந்து தொடரில், கிறிஸ்டியானோ ரொனால்டோவின் ரியல் மாட்ரிட் அணி சாம்பியன் பட்டம் வென்றது. பைனலில், சான் லாரன்சோ அணியை தோற்கடித்தது. மொராக்கோவில், 'கிளப்' அணிகளுக்கு இடையிலான 11வது 'பிபா' உலக கோப்பை கால்பந்து தொடர் நடந்தது. இதன் பைனலில், ஸ்பெயினின் ரியல் மாட்ரிட் அணி, அர்ஜென்டினாவின் சான் லாரன்சோ அணிகள் மோதின. அபாரமாக ஆடிய ரியல் மாட்ரிட் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ரியல் மாட்ரிட் அணி சார்பில் ரமோஸ், பாலே தலா ஒரு கோல் அடித்தனர். இதன்மூலம் ரியல் மாட்ரிட் அணி, 'கிளப்' அணிகளுக்கு இடையிலான உலக கோப்பையில் முதன்முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. தவிர, இத்தொடரில் கோப்பை வென்ற 9வது அணி என்ற பெருமை பெற்றது. இத்தொடரில் ஸ்பெயினின் பார்சிலோனா (2009, 11), பிரேசிலின் கோரின்தியன்ஸ் (2000, 12) அணிகள் தலா 2 முறை கோப்பை வென்றன. சாவ் பாலோ (2005), இன்டர்னாசியோனல் (2006), மிலன் (2007), மான்செஸ்டர் யுனைடெட் (2008), இன்டர்னாஜியோனல் (2010), பேயர்ன் முனிக் (2013) தலா ஒரு முறை கோப்பை வென்றன.

## 'மொடல்' பவுச்சர்டு

டென்னிஸ் உலகின் இளம் முன்னணி வீராங்கனை பவுச்சர்டு, மாடலிங் துறையிலும் கால்பதித்துள்ளார். கனடாவின் இளம் டென்னிஸ் வீராங்கனை பவுச்சர்டு, 20.



இந்த ஆண்டில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இவர், அவுஸ்திரேலிய ஓபன், பிரெஞ்ச் ஓபன் தொடர்களில் அரை யிறுதிக்கு முன்னேறினார். தவிர, கிராண்ட் ஸ்லாம் தொடரில் பைனலுக்கு (விம்பிள்டன்) தகுதி பெற்ற முதல் கனடா வீராங்கனை என்ற பெருமை பெற்றவர். தற்போது தரவரிசையில் 7வது இடத்தில் உள்ள இவருக்கென, தனி ரசிகர்கள் பட்டாளம் உருவாகியுள்ளது. 5 அடி, 10 அங்குல உயரமுள்ள இவர், தனது அழகால் டென்னிஸ் ரசிகர்களை மயக்கி வைத்துள்ளார். தற்போது ரஷ்யாவின் அனா கோர்னிகோவா, ஷரபோவா, செர்பியாவின் இவானோவிச் போல, மாடலிங் துறையிலும் கால்பதித்து அசத்தவுள்ளார் பவுச்சர்டு. இதற்காக உலகின் பிரபல மொடலிங் நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஆகியுள்ளார். இதுகுறித்து பவுச்சர்டு கூறுகையில், மொடலிங் துறையில் நுழைந்து சாதிக்க வேண்டும் என்பது எனது சிறுவயது எண்ணம். தற்போது டபிள்யு.எம்.இ.'.ஐ.எம்.ஜி., நிறுவனத்துடன் இணைந்தது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இத்துறையில் எனது லட்சியத்தை எட்ட இந்நிறுவனம் உதவும் என்று நம்புகிறேன், என்றார். விரைவில் 'வோச்', அழகு சாதனப் பொருட்கள் மற்றும் நகை விளம்பரங்களில் பவுச்சர்டையை ரசிகர்கள் காணலாம்.

## ஷிகர் தவான்-வீராட் கோலி மோதல் உண்மைக்கு மாறான வெறும் கதைகள்: கப்டன் தோனி தகவல்


இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனின் கப்பா ஸ்ரேடியத்தில் நடந்தது. இதில் 3வது நாள் முடிவில் இந்திய அணி 2வது இன்னிங்சில் ஒரு விக்கெட்டுக்கு 71 ரன்கள் எடுத்து ஓரளவு நல்ல நிலையில் இருந்தது. 4ஆம் நாள்தான் ஆட்டத்தின் போக்கு தடாலடியாக மாறிப் போனது. அதற்கு சில சலசலப்புகளும் அச்சாரமாக அமைந்தன. நான்காம் நாள் புஜாராவுடன் தொடக்க ஆட்டக்காரர் ஷிகர் தவான் தான் களம் இறங்கியிருக்க வேண்டும். ஆனால் ஆட்டம் தொடங்குவதற்கு முன்பாக காலையில் வலைப்பயிற்சியில் ஈடுபட்ட ஷிகர் தவானுக்கு எதிர்பாராத விதமாக வலது மணிக்கட்டில் பந்து தாக்கி காயம் ஏற்பட்டது. இருப்பினும் அது பற்றி உடனடியாக அணி நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லாத தவான், கடைசி நேரத்தில் கையில் வலி அதிகமாக இருப்பதாகவும், அதனால் தன்னால் பாட் செய்ய இயலாது என்றும் கூறினார். அப்போது ஆட்டம் தொடங்க 10 நிமிடங்கள் மட்டுமே இருந்தன. இதையடுத்து 'ரன் குவிக்கும் எந்திரம்' என்று அழைக்கப்படும் இந்திய துணை கப்டன் விராட் கோலி அவருக்கு பதிலாக அவசரகதியில் களம் கண்டார். 11 பந்துகளை சந்தித்த அவர் ஒரு ரன்னில் மிட்செல் ஜான்சனின் வேகப்பந்துக்கு இரையானார். மேலும் சில விக்கெட்டுகள் மளமளவென சரியவே 45வது நிமிடத்தில் தவான் களம் இறங்கினார். காயத்துக்கு சிகிச்சை எடுத்துக்கொண்டு பேட் செய்த அவர் 81 ரன்களில் ஆட்டம் இழந்தார். ஆனாலும் டெஸ்டில் தோல்வியை தவிர்க்க முடியவில்லை. இந்தியா நிர்ணயித்த 128 ரன்கள் இலக்கை அவுஸ்திரேலியா எளிதில் எட்டிப்பிடித்து வெற்றி பெற்றது. தோல்விக்கு பிறகு பேட்டி அளித்த இந்திய காப்டன் தோனி, தவான் காயமடைந்து தன்னால் ஆட முடியாது என்ற விவரத்தை மிகவும் தாமதமாக சொன்னதால் வீரர்களின் அறையில் திடீரென அமைதியின்மையும், குழப்பமும் நிலவியதாகவும், அது அணியின் செயல்பாட்டிலும் பாதிப்பை ஏற்படுத்தி விட்டதாகவும் வேதனையுடன் கூறினார். இந்த நிலையில் வீரர்களின் அறையில் அன்றைய தினம் கோலிக்கும் அவருக்கும் இடையே வாக்குவாதம் நடந்ததாகவும் அப்போது கோலி, தவானை நோக்கி சவாலைச் சந்திப்பதிலிருந்து ஓடுகிறாய் என்று கூறியதாகவும் அணி இயக்குநர் ரவி சாஸ்திரி இருவரையும் சமாதானம் செய்ததாகவும் செய்திகள் எழுந்தன.

இது குறித்து கப்டன் தோனி கூறியதாவது:- ஆம் நீங்கள் சொல்வது உண்மை (கேலியாக) கத்தியைக் கொண்டு விராட் கோலி, தாவனை குத்தினார். அதிலிருந்து அவர் மீண்டவுடன் களத்திற்குள் அவரை தள்ளிவிட்டோம் போங்கள்! இவையெல்லாம் உண்மைக்கு புறம்பான வெறும் கதைகள். மார்வல்-வார்னர் பிரதர்ஸ் இதனைக் கொண்டு படம் தயாரித்து விடலாம். எங்கிருந்து இந்தச் செய்திகளெல்லாம் முளைக்கின்றன என்பது எனக்கு புரிவதில்லை. அணியிலிருந்து யாராவது ஒருவர் இதனை உங்களிடம் கூறியிருந்தால் அவர் பெயரை எங்களுக்குத் தெரிவியுங்கள். ஏனெனில் அவரது கற்பனைத்திறன் அபாரம், அவர் உடனடியாக வார்னர் பிரதர்ஸ் போன்ற திரைப்பட நிறுவனத்திற்கு தேவைப்படுகிறார். அந்த நபர் எங்கள் ஓய்வறையில் இருக்க வேண்டிய நபரேயல்ல, ஏனெனில் நடக்காத ஒன்றை அவர் படைக்கிறார் என்றால் அவர் உண்மையில் அபாரத் திறமை கொண்டவர்தானே. நிஜத்தில் அப்படி எதுவும் நடக்கவில்லை. ஓய்வறை சூழல் அற்புதமாக உள்ளது, எந்த ஒரு விவகாரமும் இல்லை. நாங்கள் அயல்நாடுகளில் விளையாடும்போது கடினமான சூழ்நிலை-களை எதிர்கொள்ளும் போதெல்லாம் மீடியாக்களிடம் இப்படிப்பட்ட செயல்பாடுகள் தோன்றுகின்றன. இவ்வாறு தோனி கூறினார்.

## 10 ஆண்டுகளுக்கு பிறகு சாதனை படைத்த கோஹ்லி, ரஹானே

மெல்பேர்னில் நடைபெற்றுவரும் 3வது டெஸ்டில் சதம் விளாசிய கோஹ்லி, ரஹானே புதிய சாதனையை படைத்துள்ளனர். 3வது டெஸ்டில் இந்திய வீரர்கள் கோஹ்லி, ரஹானே சிறப்பாக விளையாடி சதம் அடித்தனர். இவர்கள் இருவரும் 4வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்து 262 ஓட்டங்கள் குவித்தனர். கடந்த 10 ஆண்டுகளில் வெளிநாட்டு மண்ணில் இந்திய ஜோடி அடித்த அதிகபட்ச ஓட்டங்கள் இதுவாகும்.

ஒட்டுமொத்தமாக வெளிநாட்டு மண்ணில் ஒரு ஜோடி அதிக ஓட்டங்கள் அடித்ததில் இந்த ஜோடி 4வது இடத்தை பிடித்துள்ளது. 2004ம் ஆண்டு சச்சின்- லஷ்மண் ஜோடி சிட்னியில் 353 ஓட்டங்கள் குவித்து முதலிடத்தில் உள்ளது. 4வது மற்றும் 5வது இடத்தில் களம் இறங்கி இரு வீரர்களும் சதம் அடித்தது இது 4வது முறையாகும். இதற்கு முன் இந்திய வீரர்கள் சவுரங் கங்குலி, சச்சின், லஷ்மண் ஆகியோர் இதுபோல் மூன்று முறை சதம் அடித்துள்ளனர். அவுஸ்திரேலியாவிற்கு எதிராக 1000 ஓட்டங்கள் குவித்த 10வது இந்திய வீரர் கோஹ்லி ஆவார். இவர் இன்றைய சதத்துடன் ஆயிரம் ஓட்டங்களை கடந்தார்.



எஸ். கணேஷ்

தொடர்ச்சி 30ஆம் பக்கம்




Kingsway-Queensway
சந்திக்கருகாமையில்

- எட்டு நிமிடங்களில் ரொரன்ரோ டவுன் ரவுன்
- இரண்டு நிமிடங்களில் கார்டினர் விரைவுப் பாதை
- நிமிடங்களில் பாடசாலை, வணிக மையங்கள்
- 24 மணிநேர பாதுகாவலர்கள் மற்றும் ரெனிஸ் கோர்ட், உடற்பயிற்சியரங்கம், உள்ளக,வெளியக நீச்சல் குளங்கள்
- குறைந்த விலையில் சகல வசதிகளும் உள்ளடங்கிய ஒரு அறை நவீன Condo

Ragunathan Mahesu – Sales Rep – 416-450-6833

VEEDU REALTY INC. BROKERAGE

416-759.6000

# கடன் எடுத்தேனும் முதலீடு செய்து செலுத்தி வருமான வரியினை மீளப்பெறுங்கள்

## கனடிய தகவல் தொடர் 224

### *A CATCH UP RRSP LOAN & INVEST*

வருமான வரி பத்திரங்கள் தயாரித்து சமர்பிக்கும் காலம் ஆரம்பித்து விட்டது. 2014 ஆம் ஆண்டில் உங்கள் வருமானம் அதிகம் என்பதால் கனடிய அரசுக்கு அதிகம் வரி செலுத்திய விட்டீர்கள் என கருதினால் இதில் ஒரு பகுதியேனும் மீளப்பெற வேண்டுமானால் அதனை எவ்வாறு மீளப்பெறுவது?

கடந்த வருடங்களில் தங்களின் வருமானத்தினை அடிப்படையாக வைத்து குறிப்பிட்ட ஒரு தொகை வரை ($25,000 டொலர் என கருதுவோம்) பதிவு செய்யப்பட்ட ஓய்வூதிய திட்டத்தில் முதலீடு செய்யலாம் என கனடிய வருமானவரி நிறுவனம் அனுமதி தந்துள்ளது. (RRSP Contribution room) இந்த $25,000 டொலரினை முதலீடு செய்ய உடனடியாக தங்களின் கைகளில் பணம் இல்லாமலும் இருக்கலாம்.

ஏற்கனவே வருமான வரியும் அதிக வருமானம் என்ற அடிப்படையில் 40% (Hight tax bracket for high income level) அறவிடப்பட்டுள்ளது. மிகக் குறைந்த வட்டியில் நிதி நிறுவனங்கள், வங்கிகள், காப்புறுதி கம்பனிகள் கடன் வசதிகளை ஒழுங்கு செய்துதந்து முதலீட்டு வசதிகளையும் செய்து தர உங்களை அழைத்துக் கொண்டிருக்கிறது.




கடனாக எடுத்த $25,000 டொலர் பணத்தினையும் பதிவு செய்யப்பட்ட ஓய்வூதிய திட்டத்தில் (RRSP Plan) பெப்ரவரி 2015 இற்கு முன்னர் முதலீடு செய்தால் சுமார் $10,000 டொலர் செலுத்திய வரியினை மீளப்பெறலாம். மீளப்பெற்ற வரி பணம் $10,000 இல் கடனை கட்டி மிகுதி $15,000 டொலர் கடனையும் குறைந்த வட்டியோடு பகுதி பகுதியாக செலுத்தி முடிக்கலாம். விரும்பினால் துரித கதியில் செலுத்தி முடித்து விடலாம்.

முதலீட்டில் (RRSP savings fund) வைப்பு செய்த $25,000 டொலர் பணம் வட்டிக்கு வட்டி என்ற வேகத்தில் வளர்ந்து வரும். பெறப்பட்ட கடனுக்கு செலுத்தும் வட்டி யினை விட இங்கு முதலீட்டு வளர்ச்சி என்பது நீண்ட காலம் விடும்போது வேகமாக வளர்ந்து வரும். இந்த வளர்ச்சிக்கு எதுவித மான வரியும் செலுத்தத் தேவையில்லை.

வருமானமில்லாத காலத்தில் உபயோகிக்க அல்லது வயோதிப காலத்தில் பயன்படுத்த இந்த சேமிப்பு முதலீட்டு பணம் தவறாது கை கொடுக்கும்.

பொதுவாக மேலைத்தேச நாடுகளில் செல்வந்தர்களாக வந்தவர்கள் இரு கோட்பாட்டினை தத்துவார்த்த பூர்வமாக குறிப்பிடுவார்கள்.

1. கடுமையான உழைப்பில் பணம் சேமிப்பது முதல் கட்டம்.

2. வங்கிகளின் பணத்தினை உபயோகித்து பணம் சேமிப்பது இரண்டாவது கட்டம் என்பதாகும்.

**காப்புறுதி கம்பனிகளின் முதலீட்டு திட்டங்கள் எதிர் வங்கி போன்ற நிதி நிறுவனங்களின் முதலீட்டு திட்டங்கள்** (Segregated funds vs Mutual funds)

இங்கு வங்கி போன்ற நிதி நிறுவனங்களின் முதலீடு செய்வது நல்லதா?
அல்லது அனுபவமுள்ள காப்புறுதி முகவரின் உதவியுடன் காப்புறுதி கம்பனியில் முதலீடு செய்வது நல்லதா?

இரண்டும் ஒன்றுதான்! வங்கி, நிதி நிறுவனங்களின் முதலீடுகளை மாகாண முதலீட்டு சட்டங்கள் (Securities legislation) நெறிப்படுத்துகின்றன.

காப்புறுதி கம்பனிகளின் முதலீடுகளை மாகாண காப்புறுதி சட்டங்கள் (Provincial life insurance act) நெறிப்படுத்துகின்றன.

ஆனால் காப்புறுதி கம்பனிகளின் முதலீட்டில் சில பிரத்தியேகமான அனுகூலங்களை இங்கு குறிப்பிடலாம்.

**1. முதலீட்டின் பாதுகாப்பு**
(financial protection)

சில துர் அதிர்ஸ்டமான சந்தர்ப்பங்களில் முதலீட்டு வளர்ச்சி என்பது நாட்டின் பொருளாதார பாதிப்புகளினால் பயங்கரமாக வீழ்ச்சி அடையலாம். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் ஆரம்ப முதலீட்டு பண பெறுமதி




கீழே இறங்கி, இருந்த பணமும் குறைந்த கொண்டு போகும் நிலைமை உருவாகமாட்டாது என உறுதியாக சொல்ல முடியாது. ஆனால் காப்புறுதி கம்பனியில் முதலீடு செய்யும்போது, குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு தொடர்ந்து பணத்தினை கணத்தில் வைத்திருந்தால் 75% - 100% வரை ஆரம்ப வைப்பு பணத்திற்கு ஆபத்து எதுவும் உருவாகாது வெளியே எடுக்கலாம்.

**2. எவரும் கைவைக்க முடியாத பாதுகாப்பு** (creditor protection) கொடுத்து தீர்க்க வேண்டிய தங்களின் பண கொடுப்பனவுகளில் தங்களுக்கு எதிராக நீதிமன்ற உத்தரவுகள் ஏதாவது வந்தால் வங்களில் உள்ள சகல முதலீடுகளையும், அரசின் சட்டங்களை வைத்து எந்தி சந்தர்பத்திலும் முடக்கலாம். ஆனால் காப்புறுதி கம்பனியில் உள்ள தங்களின் முதலீட்டை கனடாவின் சட்டங்களோ அல்லது நீதிமன்ற உத்தரவோ எந்த சந்தர்ப்பத்திலும் அதிகாரத்தினை உபயோகித்து முடக்க முடியாது.

**3. மரணத்தன் பின்பு பாதுகாப்பு**
(Death protection)

எதிர்பாராதவிதமாக தங்களுக்கு உயிர் இழப்பு ஏற்பட்டால் எவருக்கு தங்களின் முதலீட்டு பணம் போய் சேர வேண்டும் என்பதனை காப்புறுதி கம்பனியில் முதலீட்டு கணக்கினை ஆரம்பிக்கும் போதே குறிப்பிட்டு வைக்கலாம். இட்ட முதலீடு நட்டமில்லாது தங்களின் உயிரிழப்பின் பின்பு தாம் விரும்புபவருக்கு நேராக போய் சேரும். ஆனால் வங்களில் இந்தமாதிரி வசதிகள் இல்லை. உயிர் இழப்பின் பின்பு வாரிசுகள் சட்டரீதியான அணுகு முறை மூலமே பணத்தினை மீள் பெறலாம். தங்களின் உயிர் இழப்பின் பின்பு நட்டமில்லாது வாரிசுகளுக்கு முழுவதும் சேரும் என்பதற்கு முழுமையான உத்தர வாதமும் இல்லை.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

AUM WELLNESS CLINIC IN

Healing Massage, Suffering From Pain?

Get Relief From:

முதுகுவலி கழுத்துவலி தோள்பட்டைவலி
முழங்கால் வலிகள் தீராததலைவலி நரம்புப்பிடிப்பு
நீரிழிவு தூக்கமின்மை கொலஸ்ரோல்
உடல் எடை குறைத்தல் இரத்த ஓட்டத்தை சீராக்குதல்
போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்



Dr. Lata

Based on Appointment

Cell: 416.890.9217 Office: 647.304.6046
5215 Finch Ave. E. #220, Toronto, ON

# புதிய புத்தாண்டே புலந்து நீ வருக




மாதாகோவில் மணியடிக்க
மண்ணில் மாந்தர் மகிழ்ந்து பாட
காலைக்கதிரவன் கண் விழிக்க
காக்கா குருவி களித்துக் கூட
வெண்பனி பொழிந்து விண்ணை மறைக்க
விண்ணவர் வந்து வாழ்த்து கூற
புதிய புத்தாண்டே புலர்ந்து நீ வருக

தங்கத் தாமரை தன்முகம் காட்ட
தவிக்கும் வண்டுகள் தாவி வந்தாட
விண்ணில் விண்மீன் வித்தைகள் காட்ட
வெண்ணிலா வந்து விபரம் கேட்க
கத்துங் கருங்கடல் கரையிலே கரைய
கருங் குழல் கன்னியர் கடுகி விரைய
புதிய புத்தாண்டே புலர்ந்து நீ வருக

பஞ்சம் பட்டினி பசி பறந்திட
பாரில் பகலவன் பட்டொளி காட்ட
துன்பம் துயரம் துக்கம் தொலைய
தொல்லைகள் தொலைந்து சுகங்கள் விரைய
காடுகள் விளைந்து கடும் பசி போக்க
நாடுகள் தோறும் நல்லுறவு ஓங்க
புதிய புத்தாண்டே புலர்ந்து நீ வருக

போர்கள் ஓய்ந்து பொறாமைகள் களைந்து
புதிய பூமி புதிதாய்ப் படைத்து
புதுமைகள் செய்து புண்ணியம் தேடி
நண்பர்கள் நாடி நல்லுறவு கூடி
நானிலம் மகிழ நலமாய் வாழ
புதிய புத்தாண்டே புலர்ந்து நீ வருக



- மார்க்கம் சந்திரன் -

# புத்தாண்டில் புத்தெழுச்சி




புத்தாண்டில் புத்துணர்ச்சிகள் மனதில் பொங்கும்
பத்தோடு பதினொன்றாக புதுத்திட்டங்கள்
மனதில் வந்து வந்து போகும்

கடந்த கால நினைவுகளோ அலைஅலையாக
மனதுள் புகுந்து பரந்துவிரியும்
கொண்டாட்டங்களும் திண்டாட்டங்களும்
அழுகையும் சிரிப்பும், ஏற்றமும் இறக்கமும்
எல்லாமே பசுமையான நினைவுகளாக
உறங்கிக்கிடந்த மனதில்
எழுந்து நின்று நடனங்கள் ஆடும்
ஊஞ்சலாடும் மனதை சமப்படுத்துவோம்
நமக்கு நாமே ஆலோசகர் ஆவோம்
எல்லாம் நன்மைக்கே என்ற
தாரக மந்திரத்தால் மனம் சமநிலைப்பட்டு
ஆறுதல் அடையும்.

காயப்பட்ட நினவுகளும் புண்பட்ட தருணங்களும்
யாவருக்கும் புதிது அல்லவே
இன்பதுன்ப இரட்டைப்பிறவிகளை
ஒன்றாகவே பார்க்கப்பழகினால்
அதிர்ச்சிதரும் தருணங்கள்
வாழ்வில் உண்டா?

மக்கள்படும் துன்பங்களும் வேதனைகளும்
சூரியனைக்கண்ட பனிபோல் மறைந்திட
புத்தாண்டே விரைந்து வா
இன்னும் இன்னும்
எத்தனை வாழ்க்கைப்பாடங்கள் உண்டோ
அத்தனையையும் அள்ளி அள்ளித்தா
சுடச்சுட ஒளிரும் பொன்போல் எல்லோரும்
அநுபவஒளி பெற்று வளமான வாழ்வு பெறவே
2015 ஆம் ஆண்டே விரைந்து வருவாய்

இரு கரம் நீட்டி வரவேற்கின்றோம்
பருவகாலம் மாறிநிற்கும்
இந்தக்குளிர்கால வேளையில்
மனம் குளிர விரைந்து வருவாய்

- ரஞ்சி கதிர் -

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ M CAT Classes
✓ EQAO GR 3 & 6
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

## இணுவில் திருவூர் ஒன்றியம் அறிவித்தல்

## பொங்கல் விழா 2015

கனடா வாழ் இணுவில் மக்களின் 14 ஆவது பொங்கல் விழா கனடா கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் 24.01.2015 சனிக்கிழமையன்று இடம்பெறவுள்ளது. இவ்விழாவில் நிகழ்ச்சிகள் வழங்கவிரும்பும் இணுவில் பிள்ளைகள் தங்கள் விபரங்களைத் தைப்பொங்கல் தினத்திற்கு முன்பாகத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு: **416.496.9071/ 416.430.0422 / 647.885.7407**

**Home Line of Credit**
upto $100,000
NO APPRAISAL FEE — FUNDED WITHIN 4-5 DAYS
YOU'RE APPROVED WITHIN 24 HOURS

Need 2nd MORTGAGE?
YOU DECIDE HOW MUCH YOU NEED!

| 2nd MORTGAGE | YOU PAY BACK |
| --- | --- |
| $20,000 | $133/mo |
| $30,000 | $200/mo |
| $40,000 | $267/mo |
| $50,000 | $333/mo |
| $75,000 | $500/mo |
| $100,000 | $667/mo |

BAD CREDIT? NO PROBLEM!
NO INCOME VERIFICATION — NO CREDIT CHECK
416.298.2777
ULTIMATE MORTGAGE AND FINANCE SOLUTIONS INC.
LIC#11995. 305-5200 Finch Ave E. Scarborough, ON M1S 4Z5

# திரை விமர்சனம் - பிசாசு

புதிய தலைமுறை நம்பிக்கை இயக்குநர்களில் ஒருவரான மிஷ்கின் படம்! ஆள்கடத்தல், தொடர் கொலைகள், திகில் என மர்மப் பிரதேசங்களையே இதுவரை களனாகக் கொண்டவர் தற்போது ‘பிசாசு’ என அறிவித்துக்கொண்டு மர்மத்துடன் வந்திருக்கிறார்.

கதாநாயகன் நாகா, இசையமைப்பாளர் ஒருவரிடம் வயலின் வாசிப்பவராக பணி புரிகிறான். ஒருநாள் சாலை விபத்தொன்றில் அடிபட்டு உயிருக்கு போராடும் கதாநாயகி பிரயாஹூாவை ஆட்டோ ஓட்டுநர் ஒருவர் உதவியுடன் மருத்துவமனையில் சேர்க்கிறான். ஆனால், சிகிச்சை பலனின்றி பிரயாஹூா பலியாகிறாள். இந்தச் சம்பவம் நாகாவை பெரிதும் பாதிக்கிறது. ஏதோவொன்றால் ஈர்க்கப்பட்டு அவளுடைய வலது கால் செருப்பை தன் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு வருகிறான். தன் கையைப் பிடித்தபடியே ‘அப்பா’ என்ற ஒற்றை வார்த்தையுடன் பிரயாஹூா உயிரைவிட்டது அவன் மனதுக்குள்ளேயே நிற்கிறது. பணியிலும் அவனால் அதிக கவனம் சொலுத்த முடியவில்லை.



- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -

அதன்பிறகு வரும் நாட்களில் நாகா வீட்டில் தொடர்ச்சியாக சில அமானுஷ்ய சம்பவங்கள் நிகழ்கின்றன. வீட்டுக்குள் யாரோ இருப்பது போன்ற உணர்வை யடையும் நாகா, துணைக்கு தனது நண்பனை அழைத்துவந்து வீட்டில் தங்க வைக்கிறான். விரைவில் இருவருமே வீட்டுக்குள் பேய் ஒன்று இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்கிறார்கள். பேயை விரட்ட மத சடங்குகளைச் செய்து பார்க்கிறார்கள். ஆவி அமுதாவை அழைத்து ஆவியுடன் பேசுகிறார்கள். ஆனால் அமுதாவை அடித்து விரட்டி விடுகிறது ஆவி. ஒருகட்டத்தில் விபத்தில் இறந்துபோன பிரயாஹூாதான் தனது வீட்டில் ஆவியாக வசிக்கிறாள் என்பதை நாகா உணர்கிறான். இந்நிலையில் நாகாவின் அம்மா அவருடன் வந்து தங்குகிறார். வீட்டில் ஆவியிருப்பதை அம்மாவுக்கு நாகா சொல்கிறான். ஆனால், அவர் அதனை பெரிதாக எடுத்துக் கொள்ள வில்லை. ‘பேயாவது பிசாசாவது’ என்று கூறி அதனை அசட்டை செய்கிறார். நாகாவுக்கோ, ஆவி அம்மாவை ஏதாவது செய்துவிடுமோ என்ற பயம். அவர் பயந்ததுபோலவே நிகழ்கிறது. ஒருநாள் நாகாவின் அம்மா குளியலறையில் வழுக்கி விழுந்துவிடுகிறார். பலமாக அடியும் படுகிறது. அதற்கு காரணம் பிரயாஹூாதான் என நினைக்கும் நாகா, ‘உன்னைக் காப்பற்ற வந்ததற்கு எனக்கு இது தண்டனையா. முடிந்தால் உன்னைக் கொன்றவர்களை தேடிப் போக வேண்டியது தானே’ என குமுறுகிறார். ஆனால், அவன் அம்மா குணமடைந்து வந்து சொல்லும் உண்மையோ வேறு மாதிரி இருக்கிறது. அடிப்பட்டு விழுந்த தன்னைக் காப்பாற்றியது ஆவிதான் என்கிறார் அம்மா. அதன்பிறகே நாகாவுக்கு பிரயாஹூா ஆவி தனக்கு உதவி களையே செய்கிறது என்று தெரிகிறது. தனக்கு உதவும் பிரயாஹூாவின் ஆவிக்கு உதவ முன்வருகிறார். அவளை விபத்திற்குள்ளாக்கியது யார் என்ற உண்மையை கண்டுபிடிக்க துப்புதுலக்க ஆரம்பிக்கிறார்.

அந்த நபர் யார்? ஏன் அவர் பிரயாஹூாவைக் கொன்றார்? பிரயாஹூா ஆவி அவரைப் பழிவாங்கியதா? என்பது மீதிக்கதை. கதா நாயகன் நாகா, மிஷ்கின் படங்களுக்காகவே உருவாக்கப்பட்டவர் போல் இருக்கிறார். முகத்தை மறைக்கும் அடர்ந்த முடியுடன் ஓடுகிறார், படபடக்கிறார், தட்டச்சு வேகத்தில் பேசுகிறார். நன்றாக நடிக்கவும் செய்திருக் கிறார். கதாநாயகி பிரயாஹூா அழகுடன் தோன்றி கனவுகளை உருவாக்குபவர் அடுத்தடுத்து காட்சிகளில் பேயாக உருவாகி நாகாவை மட்டுமல்லாமல் நம்மையும் பயமுறுத்துகிறார். பிரயாஹூா அப்பாவாக வருகிறார் ராதாரவி. வித்தியாசமான பாத்திரம். குறை சொல்ல முடியாத நடிப்பு. நாகா வீட்டுக்கு கீழ்வீட்டு போர்ஷனில் இருக்கும் தம்பதிகள், வினோதினி, அவருடைய ஊனமுற்ற மகன், நாகாவின் இரண்டு நண்பர்கள், அபார்ட்மெண்ட்வாசிகள், சுரங்கத்தில் பிச்சையெடுக்கும் கண் தெரியாதவர்கள், அவர்களிடமிருந்து காசைப் பிடுங்கி வாழ நினைக்கும் ஊதாரிகள், ட

**தொடர்ச்சி 30ஆம் பக்கம்**

# Markham NS Dental

*Care, Comfort, Convenience, Confidence.......*

**9293 Markham Road, Suite 4, Markham, ON. L6E 1A3**

WISHING YOU A
Merry Christmas & A Happy New Year

## Dr. Nalini Sutharsan BDS / DDS

***Dental Surgeon***

**ALL YOUR DENTAL NEEDS**



We offer Braces for Kids & Adults
Always welcome new patients,
Walk-in & Emergency
Sleep Dentistry for Adult & Children
Family Dentistry in a caring environment
0% Finance on Braces, Invisalign & Major Treatment
We speak your Language
All types of insurance are accepted
(Including Welfare, ODSP, Cinot & Healthy Smile)
Everyday Open
Free Consultation
Easy Payment plan Available
Senior and Student Discounts

www.MarkhamNSDental.com
905-472-4111

## Why should you get Braces Early?

**Call Dr. Nalini Sutharsan for free consultation**


பல்லின மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் 25வருட கால வாகன திருத்த வேலை அனுபவத்துடன்
MS7
QUALITY PRE-OWNED AUTO SALES
Div. of NTE AUTO Inc.
New Trade Engineering
Complete Auto Service & Repairs to All Makes and Models.
All kinds of Quality Pre-Owned Vehicles for Best Price Guaranteed.
சகலவிதமான உங்கள் வாகனத் தேவைகளையும் உத்தரவாதத்துடனும், நம்பிக்கையுடனும் பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்.
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்
Tel: 416-399-6640
30 Old Kennedy Road, Markham, ON L3R 0L6

# புத்தாண்டு நல்வாழ்த்து 2015

எமது வளர்ச்சிக்கு
என்றும் ஆதரவு தரும்
நண்பர்கள், வாடிக்கையாளர்கள்,
முகவர்கள், ஊடகநண்பர்கள் மற்றும்
யாவருக்கும்
புதுவருட நல்வாழ்த்தினை
தெரிவிக்கின்றோம்.






**Justin Williams**
*Broker / Manager*



**Raja Mahendran**
*Broker / Owner*



**Eddie Woo**
*Broker / Owner*

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife / GTA Realty Inc., Brokerage***

**5215 Finch Ave, E, #203 Toronto, ON**

**Tel: 416.321.6969**

**Independently Owned & Operated*


# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்




ஆரம்ப நாட்களில் எமது புவி இப்போதுள்ளதைப் போலப் பசுமையானதாக இருக்கவில்லை. மேடும் பள்ளமும், குன்றும் குழியுமான கொதிக்கும் தணற் பந்து. நீர்நிலைகள் புல்பூண்டுகள் எதுவுமில்லாது, எரிமலை வெடிப்புகளைக் கொண்ட, எங்கும் நெருப்பாறுகள் வழிந்தோடும் மேற்பரப்புடைய ஒரு கோளப் பந்து போலத்தான் இருந்தது. காலம் செல்லச் செல்ல மெதுமெதுவாக புவியின் மேற்பரப்பு இறுகி, நீர் நிலைகளை யும் தரைப் பகுதிகளையும் கொண்ட மேற்பரப்பாக மாறியது. அல்லாமலும் தன்னைச் சுற்றித் தனக்கெனவொரு வளி மண்டலத்தையும் ஆக்கிக் கொண்டது. இவ்வளவு மாற்றங்களுக்கும் புவியின் போதுமான அளவிலான திணிவும், கதிரவனி ல் இருந்து அது இருந்த தூரமும் புவி கொண்டிருந்த தனிமங்களும் பொருத்தமாக இருந்தன. குறிப்பாக, புவியின் உயிர்ப்பான அதன் மேற்பரப்பும் எரிமலைக் கொந்தழிப்பு களும்தான் புவியினை நன்றாகச் செப்பனிட்டன. இந்த எரிமலைக் கொந்தழிப்பு கள்தான் புவியினைச் சுற்றி வளிமண்டலம் உண்டாவதற்கும், அதன் தொடர்ச்சியாகப் புவியின் உயிரினத் தோற்றத்திற்கும் அடிப்படையாயின. புவியில் உயிரினத் தோற்றம் எவ்விதம் அமைந்தது என்பதனைப் பார்ப்பதற்கு முன்னராக உயிர் என்றால் என்ன? அதனுடன் தொடர்பான உயிரினம் என்றால் என்ன என்பவை பற்றிச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய அவசியமும் உள்ளது. எனவே அதனை முதலிற் பார்த்து விட்டு, புவியில் உயிரித் தோற்றம் என்பது எவ்விதம் அமைந்தது என்பதனை விஞ்ஞானத்தனத்தில் பார்ப்போம்.

## உயிரும் உயிரினங்களும்

உயிரினம் என்பது உடலை கொண்ட சடத்தையும் அச்சடத்தினை இயக்கவல்ல உயிரையும் கொண்டது என்பது எங்கள் அனைவருக்கும் நன்கு தெரிந்த விடயம். இதில் சடம் என்பதனை ஐம்புலன்களாலும் அறிந்து கொள்ளலாம். உயிர் என்பதனை அடையாளம் காண்பது, எதுவெனக் கூறுவது தான் முடியாத காரியமாக உள்ளது. இனி, வெறுமனே சடத்தினாலும், உயிரினாலும் உயிரினத்தை முற்றாக அறிந்து கொள்ள முடியாது. விஞ்ஞான மொழியில் உயிரினம் என்றால் என்ன வெனக் கூறுவதெனில், சடத்துடன் தம்மை பாதுகாப்பதற்கும் இனவிருத்தி செய்து கொள்வதற்குமான சிக்கலான தொடர் செயற்பாடு கொண்ட அமைப்பினை தன்னுள் கொண்ட ஒன்றே உயிரினமாகும். வேற்றுக் கிரக மனிதர்கள் என்பதும் இப்படியான உயிரினம் ஒன்று பற்றியதாகவே இருக்கிறது. எனவே, உயிரினம் ஒன்றின் உயிரியல் இயல்பு களைத் தெரிந்து கொண்டால் வெளி உலக வாசிகளின் புதிரை ஓரளவுக்கேனும் புரிந்து கொள்ளலாம். அந்த வகையில் உயிர் என்றால் என்ன என்பது முக்கியமான ஒன்றாக அமைகின்றது. வேதாந்திகள், தத்துவஞானிகள், விஞ்ஞானிகள், ஆய்வாளர் கள் எனப் யாராலும் தெளிவாக வரையறுக்க முடியாததே உயிர். உயிர் என்றால் என்னவென்று கேட்டால் யாரிடம் இருந்தும் தெளிவான பதில் வராது.




சமய ஒழுங்குகளின் வழியில் உயிர் என்பது ஆண்டவனின் அருள் எனக் கூற முடியுமே தவிர எப்படி எனக் கூறமுடியாது. ஆண்டவன் அருளிய மற்ற எல்லாவற்றிக்கும் விளக்கங்கள் தேடிக் கண்டு பிடிக்கும் விஞ்ஞானம் கூட உயிர் என்பதில் பெரிதாக இன்னமும் அலட்டிக் கொள்ளவில்லை என்றேதான் கூற வேண்டும். உயிரினம் ஒன்று காட்டுகின்ற இயல்புகளைத்தான் இரசாயன விளைவுகள் எனக் கூறுகின்றார்கள். உயிரினங்களின் இயல்புகளை வேற்றுக் கிரக மனிதர்களும் கொண்டிருக்க வேண்டும் என்பதனால், வேற்றுக்கிரக மனிதர்கள் என்பதும் இந்த உயிர் என்ற புதிருடனேயே ஆரம்பமாகிறது.

இயற்பியலையே பேரண்டத்தின் சகல அறிவியலுக்கும் அடிப்படை என்கிறார்கள். அவ்வழியிலே உயிர் என்றால் என்ன என்பதற்கும் என்னால் ஒரு தெளிவினைக் காண முடிகிறது. இயற்பியலின்படி, சக்தி யானது கதிர்களாக எங்கும் ஓடிக்கொண்டு இருக்கின்றது. இக்கதிர்கள் தொடர்ச்சி யானவையாக இல்லாமல், சின்னச் சின்ன சக்தித் துண்டுகளாகப் பெரும் எண்ணிக்கை யில் ஓடிக் கொண்டு இருக்கின்றன. ஒளியின் வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கும் அவ்வகை யான சக்தியின் துண்டுகளைப் போட்டோன் கள் என்கிறார்கள். எண்ணற்ற அளவில் எங்கும் ஓடிக்கொண்டிருக்கும் இப்போட்டோன் கள் தம்முள் மோதிக் கொள்ளலாமல்லவா. அப்படியாக, இரண்டு போட்டோன்கள் ஒன்றோடு ஒன்று மோதுகையில் அங்கு அவை அழிந்து போகின்றன. அதேநேரம், அங்கே இரண்டு சிறிய குட்டிச் சடங்கள் தோன்றுகின்றன. (அதாவது, சக்தியின் இரண்டு கதிர்கள் மோதுகையில் இரண்டு குட்டிச் சடங்கள் தோன்றுகின்றன.) எப்படியான சடங்கள் தோன்றுகின்றன என்றால், அயன்ஸ்ரைனின் சிறப்பான, யாவருமறிந்த $E = mC^2$ என்ற சமன்பாட்டிற்கு ஒப்ப, அமைப்பில் ஒரே மாதிரியான ஆனால் ஒன்றுக்கொன்று முரணான இரண்டு சடங்கள் தோன்றுகின்றன.

இனி மறுவிதமாக, இப்படியான ஒன்றுக் கொன்று முரணான இரண்டு சடங்கள் ஒன்றையொன்று சந்திக்கும் போது, அதாவது ஒன்றுடன் ஒன்று மோதுண்டு போகையில் அவையிரண்டும் அழிந்து போகின்றன. இப்படியாக அவ்விரண்டு சடங்களும் இல்லாமற் போகையில் அங்கே மீண்டும் சக்தியானது இரண்டு போட்டோன்களாக (அதாவது இரண்டு கதிர்வீச்சுக் கதிர்களாக) பிறப்பிக்கப்படுகிறது. இங்கும் சடத்தில் இருந்து சக்தி தோன்றுவது $E = mC^2$ இற்கு ஒப்பவே நடக்கிறது. அதாவது ஒரே மாதிரி யான ஆனால் எதிரெதிர் இயல்புகளைக்

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கொண்ட இரண்டு சடங்களும் பொருளழி வுக்கு உட்பட்டு, மீண்டும் சக்தியின் இரண்டு கதிர்கள் தோன்றுகின்றன. அயன்ஸ்ரைன் இதனைக் காட்டியிருக்கிறார். எங்களது புடவியின் ஆரம்பக் காலத்தில் இந்த நிகழ்வுகள் மாறிமாறி நடந்தன என்பதை ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இப்படியாக இயற்பியலின்படி பார்க்கையில் சக்தியும் சடமும் ஒன்றுதான் எனினும் ஒன்றுடன் ஒன்று ஒட்டாதவை. இந்த சக்தியானது சடத்தை வெளியில் இருந்து ஆட்டி வைக்கக் கூடியது, அதனை தெரிந்தும் கொள்ளலாம். எங்களது உயிரும் உடலாகிய சடத்தை இயக்குகிறது. ஆனால் வித்தியாசம் என்னவெனில், உயிரினை எந்தவிதத்திலும் காணமுடியாது. சாதாரண சடத்தை இயக்கும் சக்தியைப் போலல்லாது, உயிர் உடலின் உள்ளேயே உள்ளது. எப்படியெனில் உடலுடன் ஒட்டியும் ஒட்டாதவாறு உள்ளது. எனவே, உயிருக்கு, சக்தியின் இயல்பும் உண்டு, சடத்தின் வாசனையும் உண்டு எனக் கூறலாம். ஆயின் சக்தியும், சடமும் கலந்த ஒன்றாக, சக்தியிற்கும் சடத்திற்கும் இடைப்பட்ட ஒன்றாக உயிர் இருக்குமோ? என்ற கேள்வி




– கனி –
416.261.1348
leptons@hotmail.ca


தொடர்ச்சி 30ஆம் பக்கம்


mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# மகாஜனாவின் உயிர்த் துடிப்பு நின்றதுவோ..?



04-09-1935

24-12- 2014

ஆளுமை மிக்க ஆசிரியராய், அதிபராய், ஆலோசகராய் எங்கள் உயிர்த் துடிப்பில் கலந்திருந்த

## அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள்

இன்று எம்மைவிட்டுப் பிரிந்து விட்டார்.

எமது கல்லூரியின் சாதனையை நூற்றுக்கணக்கான பல்கலைக்கழகப் புகுதலின் மூலம் அதிரவைத்தவரே,

கல்வியோடு விளையாட்டுத் துறையில் மட்டுமல்ல, இயல் இசை நாடகம் என்று அத்தனையும் எமக்குக் கற்றுத் தந்தவரே.

கனடா மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தை ஆரம்பித்து, தலைவராய், சர்வதேசத் தொடர்பாளராய், ஆலோசகராய் இன்றுவரை எமக்கு தோள் கொடுத்து, எமது சங்கத்தை இந்த மண்ணில் வெள்ளிவிழாக் காணவைத்தவரே,

பல்துறை வித்தகராய், நடமாடும் பல்கலைக் கழகமாய் எம்மோடு வாழ்ந்தவரை நாம் இன்று இழந்து விட்டோம்.

எங்கள் அதிபரின் பிரிவுத்துயரால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், பழைய மாணவர்களுக்கும், உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் எமது பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

புலம் பெயர்ந்த மண்ணில் அதிபர் என்ற அடைமொழியைத் தனக்காக்கிக் கொண்டவரே.

மகாஜனா உள்ளவரை தங்கள் பெயர் வாழும்!

**MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA**

'தெய்வத்தாய்' படத்துக்குப் பின் 'சர்வர் சுந்தரம்' படத்துக்கு வசனம் எழுதினார். இப்படத்தை கிருஷ்ணன் - பஞ்சு இயக்கியிருந்தார்கள், என்றாலும், கதை வசனகர்த்தாவான பாலசந்தருக்கே பெயரும் புகழும் கிடைத்தது. நடிகர் நாகேஷுக்கும் இப்படம் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அதே ஆண்டு 'நீர்க்குமிழி' (1965) படத்தின் மூலம் இயக்குநராக அவதாரம் எடுத்தார் பாலசந்தர். நாகேஷ்தான் இதில் கதாநாயகன். அன்று தொடங்கிய பயணத்தை தன் இறுதி மூச்சு வரை தொடர்ந்தார் பாலசந்தர். 'பார்த்தாலே பரவசம்' மூலம் நூறாவது படம் என்னும் சாதனையை நிகழ்த்தினார். பாலசந்தர் இயக்கிய கடைசிப் படம் 'பொய்', 101ஆவது படம்.

பாலசந்தர் இயக்கத் தொடங்கிய சமயம் ஸ்ரீதரின் சாதனைப் படங்கள் வெளிவந்துவிட்டிருந்தன. ஆனால், எம்.ஜி. ஆர். - சிவாஜிகணேசன் என்னும் இரண்டு நட்சத்திர நடிகர்களின் சகாப்தம் தொடர்ந்து கொண்டிருந்தது. பாலசந்தர், ஸ்ரீதர் பாணியை பின்தொடர்ந்தார். எம்.ஜி.ஆர். - சிவாஜி சகாப்தத்தினூடாக தன் முத்திரையை பதித்த ஸ்ரீதர் போலவே பாலசந்தரும் சாதனையை நிகழ்த்தினார். ஸ்ரீதர், எம்.ஜி.ஆர். - சிவாஜியுடன் இணைந்து தன் சாதனையை நிகழ்த்தினார் என்றால், பாலசந்தர் இந்த இரண்டு நடிகர்கள் இல்லாமலேயே அச்சாதனையை நிகழ்த்தினார். சிவாஜி கணேசன் நடிப்பில் பாலசந்தர் இயக்கிய ஒரே படம் 'எதி-ரொலி' (1971). எம்.ஜி.ஆருக்கு 'தெய்வத்தாய்' படத்தில் வசனம் எழுதியதோடு சரி. இவர்கள் இருவரையும் தவிர்த்து ஜெமினி கணேசன், முத்துராமன், பாலையா, நாகேஷ் போன்ற நடிகர்களையே பாலசந்தர் மிகுதியாகப் பயன்படுத்தினார். பாலசந்தரின் திரைப் பயணத்தில் 'அரங்கேற்றம்', 'நான் அவனில்லை', 'அனுபவி ராஜா அனுபவி', 'பூவா தலையா', 'பாமா விஜயம்', 'தண்ணீர் தண்ணீர்', 'அச்சமில்லை அச்சமில்லை', 'அபூர்வ ராகங்கள்', 'புன்னகை மன்னன்', 'எதிர் நீச்சல்', 'வறுமையின் நிறம் சிகப்பு', 'உன்னால் முடியும் தம்பி', 'நினைத்தாலே இனிக்கும்', 'அவள் ஒரு தொடர்கதை', 'சிந்து பைரவி' போன்றவை இன்றும் ரசிகர்களால் கொண்டாடப்படும் மைல் கற்கள்.

'அரங்கேற்றம்' (1970), அதன் கருத்துக்காகவும் கையாளுமைக்காகவும் அக்காலகட்டத்திலேயே பெரும் பரபரப்பை உண்டாக்கியது. 'நான் அவனில்லை', ஜெமினி கணேசனின் சொந்தத் தயாரிப்பில் பாலசந்தர் இயக்கிய படம். இதுவும் அதன் புதுமையான கையாளுமைக்காகப் பெரிதும் பாராட்டப்பட்டது. ஜெமினிகணேசனுக்கு '.:.பிலிம்.:.பேர்' விருது வாங்கிக் கொடுத்தது. ஆனால், வர்த்தக ரீதியாக வெற்றி பெறவில்லை. 'உன்னால் முடியும் தம்பி' முதலில் சிரஞ்சிவி நடிப்பில் தெலுங்கில் பாலசந்தர் இயக்கிய படம். தெலுங்கில் அப்படம் சரியாகப் போகவில்லை. ஆனால், தமிழில் பெரிய வெற்றியும் பாராட்டுகளும் பெற்றது. 'நினைத்தாலே இனிக்கும்' கமலஹாசனும் ரஜினிகாந்தும் இணைந்து நடித்த கடைசிப் படம். இப்படமும் எதிர்பார்த்த வெற்றியை அடையவில்லை. என்றாலும், வரலாற்றில் இடம்பெற்றுவிட்டது. பாலசந்தர் வெளிநாடுகளில் படப்பிடிப்பை நிகழ்த்திய முதல் படமும் இதுவேயாகும். 'அனுபவி ராஜா அனுபவி', 'பூவா தலையா', 'பாமா விஜயம்' ஆகிய படங்கள் நகைச்சுவைக்காக பாலசந்தர் முத்திரையைப் பதித்த படங்கள். இப்படங்கள் வெற்றிப் படங்களாக அமையவில்லை என்றாலும், பிற்காலத்தில் பாலச்சந்தர் இயக்கிய நகைச்சுவைப் படங்களான 'தில்லு முல்லு', 'பொய்க்கால் குதிரை' ஆகிய வற்றுக்கு முன்னோடியாக இவை இருந்தன. ரஜினிகாந்த் நடித்த 'தில்லு முல்லு' இந்தியில் அமோல் பாலேகர் நடித்த 'கோல்மால்' என்னும் படத்தைத் தழுவி எடுக்கப்பட்டது.

பாலச்சந்தர் வண்ணத்தில் இயக்கிய முதல் படம் 'நான்கு சுவர்கள்'. ரவிச்சந்திரன், ஜெய்சங்கர் நடிப்பில் 1971ஆம் ஆண்டு வெளியான இத்திரைப்படம் படுதோல்வியடைந்தது. இத்தோல்வியால் மீண்டும் கருப்பு வெள்ளைக்கே திரும்பி விட்டார் பாலச்சந்தர். அடுத்து வெளியான 'நூற்றுக்கு நூறு' பெரும் பாராட்டையும் வெற்றியையும் ஈட்டி பாலசந்தரை மீண்டும் முன்னனி இயக்குநர்களில் ஒருவராக்கியது. 'தண்ணீர் தண்ணீர்', கோமல் சுவாமிநாதனின் நாடகத்தைத் தழுவி எடுக்கப்பட்டது. இப்படத்தின் வசனத்தில் கோமலும் பங்களித்திருந்தார். தமிழில் இன்றுவரை முக்கியமான ஒரு அரசியல் படமாக இப்படம் குறிப்பிடப்படுகிறது. 'சிந்து பைரவி' படத்திற்காக சுஹாசினிக்கு இந்திய அளவில் சிறந்த நடிகை விருது கொடுக்கப்பட்டது. இளையராஜாவிற்கு சிறந்த இசையமைப்பாளர் விருதினை ஈட்டித் தந்த படம் இதுதான். தமிழ் மட்டுமல்லாமல் தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய மொழிகளிலும் படங்களை இயக்கியுள்ளார் பாலசந்தர். 'ஏக் துஜே கேலியே', 'ஜரா சி ஜிந்தகி', 'ஏக் நயீ பஹேலி' ஆகியவை இன்றும் பால்சந்தர் பெயரை இந்தியில் சொல்லிக் கொண்டிருப்பவை.

மனித உறவு முறைகளுக்கு இடையிலான சிக்கல்களையும் சமூகப் பிரச்சினைகளையும் முக்கியக் கருப்பொருளாய் கையாண்டதும், பாலியல் பிரச்சினைகளைத் துணிவுடன் கையாண்டதும் பாலசந்தரின் முத்திரைகளாக போற்றப்படு

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# லிங்கா - விமர்சனம்

கடந்த டிசம்பரில் ரஜினியின் பிறந்த நாளான டிசம்பர் 12ஆம் திகதியில் வெளிவந்த படம் லிங்கா. ரஜினிகாந்த் இரண்டு வேடங்களில் நடித்திருக்கிறார். சிறிய நகைகளை திருடி அலுத்துப் போன திருடன்தான் லிங்கா. இனி பெரிய விடயத்திற்கு போக வேண்டும் என்று அவர் பல கோடி மதிப்புள்ள நகை ஒன்றை தன் கூட்டாளிகளுடன் சேர்ந்து திருடுகின்றார்.



இத்தோடு அவர் வாழ்க்கை மாறுகிறது. சோலையூர் என்ற கிராமத்தில் மரியாதை யுடன் வாழ்ந்தவர் தான் ராஜா லிங்கேஸ்வரன். சோலையூரின் பழைய கோவிலை திறக்க அவரது வாரிசு தேவை என்றதால் அவரது பேரரான லிங்காவை ஊர் மக்கள் அழைக்கிறார்கள்.

தனக்கு என ஒரு சொத்தும் வைக்காமல் லிங்கேஸ்வரர் முழுச்சொத்தையும் அனுபவித்து இருக்கிறார் என தாத்தா மீது வெறுப்புடைய லிங்கா எவ்வாறு மாறுகிறார் என படத்தைப்பார்த்து அறியலாம்.

அரசன், Collector, பொறியிலாளர், மாடு மேய்பவர் என பல வேடங்களில் தாத்தா லிங்கேஸ்வரன் வருகிறார். எந்த வடிவமாக இருந்தாலும் அவர் அந்த பாத்திரமாகவே மாறி நடிக்கிறார். அரசன் என்றால் என்ன, மாடு மேய்த்தால் என்ன, லிங்கேஸ்வரர் சந்தோசமாக இருக்கிறார். அத்துடன் அவர் எவ்வேலையை செய்தாலும் மனம் விரும்பி செய்ய வேண்டும் என்ற அறிவுரையையும் கூறுகிறார். கிராமத்தின் விவசாய தேவைக்கும், நீர் தேவையை பூர்த்தி செய்யவும் அணை கட்ட விரும்புகிற லிங்கேஸ்சுவரன் பல தடைகளை சந்திக்கிறார். ராஜாவான அவருக்கு பணம் ஒரு பிரச்சினை இல்லை. ஆனால் ஆட்கள் பிரச்சினை அவருக்கு உண்டு. ஆங்கிலேய ரின் உதவி இல்லாமல் அவ்வளவு பெரிய அணை கட்டுகிறது கடினம். அதுவும் அவர்களை எதிர்த்து கொண்டு கட்டுவது இன்னும் கடினம்.

அவ்வூர் மக்களை பாவித்து அணை கட்டலாம் என்று ராஜா நினைக்கிறார். ஜாதி, மதப்பிரச்சினைகளை தாண்டி அவர் அணை கட்டுகிறார். பல பிரிவுகளாக சண்டை பிடிக்கும் மக்களுக்கு நாட்டுப்பற்றை வளர்த்து அவர்களை ஒற்றுமையாக ராஜா வேலை செய்ய வைக்கிறார். ஆங்கிலேயர் களால் ஏமாற்றப்பட்ட லிங்கேஸ்வரர் பல கஷ்டங்களை சந்தித்தாலும் அவரது உண்மைகள் இறுதியில் வெளியாக்கப்படு கின்றன. இது 'பொய்கள் புயல் போல் வீசும். ஆனால் உண்மை மெதுவாய் பேசும். அன்று நீயே வாழ்வில் வெல்வாய், கலங்காதே" என்னும் அறிவுரை கூறும் பாட்டு மூலம் வருகிறது.



**ஞா. ஆரணி**
அகவை 16

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# நடிகமணி வி.வி. வைரமுத்து மீதான வி.என். மதி அழகனின் ஆவணப்பதிவு

முதற்கட்ட வழிகாட்டி! – தலைமுறைக்கையளிப்பு! பேராசிரியர் அ.சண்முகதாஸ் சூட்டிய புகழாரம்.

நந்தாப்புகழ்பெற்ற நாயகன் நடிகமணி வி.வி.வைரமுத்து என்ற மகுடத்தில் ஒலிபரப்பாளர் வி.என்.மதிஅழகன் எழுதிய விவரண நூல் அந்த தேசிய கலைஞனின் முழுமையான வரலாற்றை தேடி கண்டுபிடித்து எழுத முதற்கட்ட வழிகாட்டியாக அமைந்துவிட்டது. யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை தகைசார் பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.



நடிகமணி வி.வி.வைரமுத்துவின் பாரம்பரிய நாடக அரங்கியலுடன் தொடர்புபட்ட ஆவணங்களை ஒழுங்குபடுத்தி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஓய்வுநிலை பிரதிப் பணிப்பாளர் நாயகம் வி.என். மதிஅழகன் எழுதிய நூல் ஸ்காபறோ சிவிக் சென்ரரில் இடம்பெற்றது. கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவுக்கு அதன் தலைவர் ஓய்வுநிலை யாழ். பிரதிக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி எஸ்.விநாயகமூர்த்தி தலைமை தாங்கினார்.

ஸ்ரேற் பாங் ஒ.ஃப் இந்தியா கொழும்பு கிளை சர்வதேசப் பிரி வின் ஓய்வுநிலை உப தலைவர் பத்மநாதன் ரவீந்திரன் கனகச்சிதமாக வரவேற்புரை நிகழ்த்தினார். மூத்த ஒலிபரப்பாளர் பி.விக்னேஸ்வரன் அதி உற்சாகத்துடன் அறிமுகவுரை ஆற்றினார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தொடர்ந்து உரையாற்றுகையில் காலத்துக்கு ஏற்ற யுக்திமுறைகளை கையாண்டு மதிஅழகன் நூலை படைத்துள்ளார். வைரமுத்துவின் முழுமையான வாழ்க்கை வரலாற்றை பதிவு செய்ய முற்படுவோருக்கு ஒரு ஆரம்பநிலை விழிப்புணர்வை நூல் வெளிப்படுத்துகிறது - நூலின் ஊடாக அவர் ஒரு தலைமுறைக் கையளிப்பை செய்துள்ளார் என்றார். எதிர்கால சந்ததியினருக்கு மாபெரும் கலைஞனின் வரலாற்றைக் கூறுவதன் மூலம் அவரது சொந்தப் பாணியில் அமைந்த



கலை வடிவத்தை பின்பற்றி தாமும் அந்த பாதையில் முன்னேறிச்செல்லவும், புகழ்பெறவும் அவர்களுக்கு நூல் ஒரு உத்வேகத்தை அளிக்கும். தொலைக்காட்சி நேர்காணலில் ஒரு தடவை நேர்காண்பவரையும், பல தடவை நேர்காணப்படுபவரையும் கமறா ஊடாக காண்பிப்பதுபோல இன்னூலில் தம்மையும், நடிகமணியையும் மதிஅழகன் வாசகர்களுக்கு காட்டிச் செல்கிறார் என்றும் பேராசிரியர் சண்முகதாஸ் நூலின் அமைப்பை சுட்டிக்காட்டினார்.

கவிநாயகர் கந்தவனம் நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றுகையில் குரலிசை, கருவி இசை, மேடை அமைப்பு, நடிப்பு என்பவற்றின் மூலம் சாதனைகள் படைத்த வைரமுத்துவின் கலை வாழ்வு இளம் தலைமுறைக் கலைஞர்கள் பாரம்பரிய இசை நாடகத்துறையில் முன்னேறிச்செல்வதற்கான புத்துணர்வை ஏற்படுத்தும் என்றார்.

நடிகமணி வைரமுத்துவை தனக்குள்ளே வியந்துவந்த மதி-அழகன் தாம் சுவைத்துவந்த அவரது பாடல்களை, நாடகங்களை தமது எழுத்தின் ஊடே சிறிது ஆய்வும் கூட்டி ஆவணப்படுத்தியுள்ளார். அவரது ஊடகத்துறை அனுபவம் நூலில் பிரதிபலிக்கிறது என்றும் கந்தவனம் சொன்னார்.



வைரமுத்துவின் உறவினர்கள், தொழில்சார் வல்லுனர்கள், பல்துறைக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர் கள், கல்விமான்கள், ஒலிபரப்பாளர்கள் என புலம்பெயர் சமூகத்தின் பலதரப்பட்ட நூற்றுக்கணக்கானோரால் பாரிய மண்டபம் நிறைந்திருந்தது.

நந்தாபுகழ்பெற்ற நாயகன் நூல் அறிமுகவிழா இலங்கையிலும் இடம்பெறும். தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் நூல் கிடைக்கத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று வி.என்.மதிஅழகன் தமது ஏற்புரையில் தெரிவித்தார்.

மரபுக்கலை வேந்தன் பொன் அருந்தவநாதன், பூங்கொடி அருந்தவநாதன், நமணிகரன், சுதாகர் கிருஸ்ணபிள்ளை ஆகியோர் வைரமுத்துவின் நாடக மேடைப்பாடல்களை பாடி சபையோரை வெகுவாக கவர்ந்தனர்.

# Education

## Review Questions15 -1

### ➢ CHEMISTRY 11


(i) A 17.2 g of impure $NaHCO_3$ contains 3g of $KNO_3$. Solubility of $KNO_3$ and $NaHCO_3$ are 32g and 8g. What is the smallest volume of water at 20°C that could be used to remove the impurity and leave pure $NaHCO_3$

(ii) A 20.0 g sample that is 95% $K_2Cr_2O_7$ is allowed to react with 50.0 g of gaseous hydrogen chloride. How much $Cl_2$ is produced in grams?

$K_2Cr_2O_7\ (aq) + 14HCl(g) \rightarrow 7H_2O_{(l)} + 2KCl\ (aq) + 2\ CrCl_3(aq) + 3\ Cl_2(g)$

### ➢ CHEMISTRY 12

A voltaic cell is constructed from two half-cells as illustrated below.




(a) Deduce the equation for the spontaneous reaction occurring in this cell.
(b) Calculate the standard potential for this cell.

### ➢ CHEMISTRY 12

1. (i) Calculate the $K_b$ value $N_3^-$ at 25 °C ($pK_a$=4.72 at 25°C for $HN_3$)
   (ii) Write equation for the hydrolysis of $N_3^-$
   (iii) What is the pH of a 0.2 mol/L solution of sodium azide, $NaN_3$, at 25°C?
2. How many moles of NaOH must be added to 0.50 L of 0.18 mol/L $HC_3H_5O_3$(aq) to obtain a solution with pH=4.8? Assume the temperature is 25°C. (For $HC_3H_5O_3$, $pK_a$=3.86 at 25°C).

### ➢ PHYSICS 11

A piano note, $A_2$ has to be tuned to its proper frequency 110Hz. If you have a tuning fork whose frequency is 220Hz, how should you do the adjustment?

### ➢ PHYSICS 12

A thin film coated on one side of a glass lens to reduce reflection from lens surface. Determine the minimum thickness of the coating that eliminates the reflection. Assume the index of refraction of the coating material 1.32, and glass 1.5., wavelength of light =550nm, light approximately perpendicular to the lens surface.

## Answer Key : 14-23

### ➢ CHEMISTRY 12

(i) Successful collision also needed in calculation (b) Collision frequency depends on average kinetic energy. With the temperature the average kinetic energy increases slowly compared to that of sufficient energy required for reaction.

(ii) X + Y → C+ P (slow)
C + Y → Q (fast)

### ➢ ADVANCED FUNCTIONS 12

(A) $\log_5 a^2 - \log_5 ab + \log_5 b^2$;
ans = $\log_5 ab$

(i) $\frac{2}{\log_9 a} - \frac{1}{\log_3 a} = \frac{x}{\log_3 a}$ $\quad x = 3$

(ii) $\log_2(\log_5 x) = 0$ $\quad (x = 5)$

Ans. key 15-1 - next issue

☎ 647 341 3975
K.A.Srikrishnaraj PhD
ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE

# அஞ்சலி...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

கின்றன. 'அவள் ஒரு தொடர்கதை' படத்தில், திமிர் பிடித்தவள் என்று கருதப்பட்ட கதாநாயகி பாத்திரம், தனது கற்பு நிலைக்காகப் பெருமைகொள்கிற மாதிரி, 'ஒரு பெண் கர்வமாயிருக்கலாம் ஆனால் கர்ப்பமாக இருக்கக் கூடாது' என்று பேசும் வசனம் அந்நாளைய ரசிகர்களிடம் பலத்த வரவேற்பை பெற்றது. நிறைய நட்சத்திர நடிகர்களை திரைத்துறைக்கு அறிமுகப்படுத்தியவர் என்பதற்காகவும் இன்று பாலசந்தர் கொண்டாடப்படுகிறார். ரஜினியை 1975இல் 'அபூர்வ ராகங்கள்' திரைப்படத்தின் மூலம் அறிமுகப்படுத்தியவர் பாலசந்தர்தான். ரஜினியை பிர-பலமாக்கிய, சிகரெட்டைக் கையிலிருந்து தூக்கிப்போட்டு வாயில் பிடித்துக்கொள்ளும் ஸ்டைலை உருவாக்கியதும் பாலசந்தர்தான். அதனால் ரஜினிகாந்துக்குக் கிடைத்த ஜனரஞ்சக செல்வாக்கு, அவரால் அதுவரை நினைத்துப் பார்க்க முடியாத உயரத்துக்குக் கொண்டு சென்றது. 'சூப்பர் ஸ்டார்' பட்டத்தை கிடைக்கச் செய்தது. கமலஹாசன், பாலசந்தரால் அறிமுகப்படுத்தப்பட்டவர் இல்லையென்றாலும், பாலசந்தரின் அதிக படங்களில் நடித்துள்ளவர் என்ற பெருமைக்குரியவர். இதுபோல் நாகேஷும் பாலசந்தருக்கு முன்பே பெரும் சிரிப்பு நடிகராக அறியப்பட்டிருந்தவர்தான். ஆனால் 'நீர்க்குமிழி', 'எதிர் நீச்சல்' போன்ற பாலசந்தர் படங்கள் மூலமாகவே கதாநாயகன் அந்தஸ்துக்கு உயர்ந்தார் நாகேஷ்.

சிரஞ்சீவி, ராதாரவி, நாசர், பூர்ணம் விஸ்வநாதன், சரத்பாபு, சார்லி, விவேக், எஸ்.பி.பி., ஸ்ரீதேவி, ஜெயப்பிரதா, சரிதா, சுஜாதா, ஸ்ரீப்ரியா, ஜெயசுதா, ஜெயசித்ரா, கீதா, ஸ்ரீவித்யா, சுமித்ரா, ஜெயந்தி, மதுபாலா, ரம்யா கிருஷ்ணன், எஸ்.வி. சேகர், மௌலி, ஒய்.ஜி. மகேந்திரன், 'காத்தாடி' இராமமூர்த்தி, 'மேஜர்' சுந்தரராஜன்... என பாலசந்தரின் அறிமுகங்கள் இன்று தமிழ்த் திரையை நிறைத்துள்ளனர். 'அவள் ஒரு தொடர்கதை' படத்தை முழுக்க முழுக்க புதுமுகங்களை வைத்தே இயக்கியிருந்தார். ஜெயலட்சுமி, ஸ்ரீபிரியா, விஜயகுமார், ஜெய்கணேஷ் ஆகியோர் அறிமுகமான இப்படம் ஒரு வெற்றிப்படமாகவும் அமைந்தது. 'பட்டினப்பிரவேசம்' படத்தில் டெல்லி கணேஷ், சிவச்சந்திரன் போன்றோரை அறிமுகம் செய்தார். இதுவும் வெற்றிப்படமே. பிற மொழியிலிருந்து பலரை தமிழுக்கு அழைத்துவந்த பெருமையும் பாலசந்தருக்கு உண்டு. சுஜாதா (அவள் ஒரு தொடர்கதை), ஷோபா (நிழல் நிஜமாகிறது), சரத்பாபு (நிழல் நிஜமாகிறது), சரிதா (தப்புத்தாளங்கள்), பிரகாஷ்ராஜ் (டூயட்) ஆகியோர் முக்கியமானவர்கள்.




'கல்கி', 'பொய்', 'ரெட்டைச்சுழி', 'நினைத்தது யாரோ', 'உத்தம வில்லன்' போன்ற படங்கள் மூலம் நடிகராகவும் வெளிப்பட்டுள்ளார் பாலசந்தர். 'கவிதாலயா' என்னும் திரைப் படத் தயாரிப்பு நிறுவனத்தை நிறுவி, அதன் மூலமாக பிற இயக்குனர்களின் கைவண்ணத்திலும் பல திரைப்படங்களை தமிழுக்கு அளித்துள்ளார். தன் கடைசி சில படங்கள் தொடர்ச்சியாக தோல்வியைத்தழுவ, தமிழ் வெகுஜன சினிமா ரசனைக்கும் தனக்கும் இடையே விழுந்துவிட்ட இடைவெளியை ஏற்றுக்கொண்ட பாலசந்தர் 1990களுக்குப் பிறகு தொலைக்காட்சி தொடர்கள் மூலமாகத் தன் பயணத்தைத் தொடர்ந்தார். தூர்தர்ஷனில் 1990இல் வெளிவந்த இவரது 'ரயில் சிநேகம்' இன்றளவும் பேசப்படும் தொடர். 'கையளவு மனசு', 'காசளவு நேசம்', 'காமடி காலனி', 'ரகுவம்சம்', 'அண்ணி' உட்பட 15க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி தொடர்களை இயக்கியுள்ள பாலசந்தர்தான் இன்று வந்துகொண்டிருக்கும் மெகா சீரியல்களுக்கு வழிகாட்டி எனலாம். பாலச்சந்தரின் கடைசி காலகட்டத்தில், 'டைரக்டர் டச்' என்று அவரது முத்திரைகளாக போற்றப் பட்டவையே அவர் மீதான விமர்சனங்களாகவும் வைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. 'நாடக இயக்குனரின் திறமையோடு நடிகர்களிடம் வேலை வாங்கினார் என்பது ஒன்றே அவரது மிகப்பெரிய தகுதி. மற்றபடி இந்திய சினிமாவின் பெருமைகளுக்கும் அவருக்கும் சம்பந்தமில்லை. 'நாணல்', 'மேஜர் சந்திரகாந்த்', 'பாமா விஜயம்', 'எதிர் நீச்சல்' போன்ற படங்களில் மட்டுமின்றி திரைப்படங்களுக்காகவே எழுதப்பட்ட திரைக்கதைகளிலும் அவரது நாடக பாணியின் தாக்கமே அதிகம் இருந்தது. பார-திராஜா, ருத்ரைய்யா, மகேந்திரன், வெற்றிமாறன், அமீரின் 'பருத்திவீரன்' படங்களுடன் பாலச்சந்தர் படங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் எது சினிமா, எது நாடகம், எது வாழ்க்கை, எது கிம்மிக் எது கலை, எது பம்மாத்து என்பது மிக எளிதாய் புரிந்துவிடும்' என்கிறார் எழுத்தாளர் விமல-ாதித்த மாமல்லன்.

தன் மீதான விமர்சனங்களுக்குப் பதிலாக, தனது ரசிகர்கள் என்று அடையாளப்படுத்திக் கொண்டவர்களுக்கே தான் படம் எடுப்பதாக பாலசந்தர் கூறினார். 'தண்ணீர் தண்ணீர்', 'அச்சமில்லை அச்சமில்லை', 'உன்னால் முடியும் தம்பி' போன்ற பிரச்சினை சார்ந்த படங்களில் சமரசம் செய்துகொள்ளாத ஒரு இயக்குநராக அவர் வெளிப்பட்டுள்ளார் என்பதை மறுக்க முடியாது என்றாலும், தனக்குரிய படங்கள் என்கிற ஓர் வரையறையை பாலசந்தர்

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

# அகம் நகப் பழகிய நண்பர்



அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் எனது நீண்டகால நண்பர். 1954 ஆம் ஆண்டு சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் நாம் முதன்முதலாகச் சந்தித்தோம். அன்று முதலாக எமது நட்பு கங்கைபோலப் பாய்ந்து வந்திருக்கின்றது. கங்கை தூய்மையானது. எமது நட்பும் தூய்மையானது. கங்கை குறை குற்றங்களைப் பார்ப்பதில்லை. நாமும் குறை குற்றங்களைத் தூக்கிப் பிடித்ததில்லை. அன்பு அவற்றையெல்லாம் பார்ப்பதில்லையன்றோ.

பலர் காரண காரியங்களுக்காக நட்புக் கொள்வர். அதற்கு முகநகும் நட்பு என்று பெயர். அதற்கு மாறானது அகம் நக நட்பது. அதனைச் சொல்லும் வள்ளுவர் பெருமான் குறள் இது:

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.

எமது நட்பு சுயநலத்தையோ பிரதிபலன் களையோ எதிர்ப்பார்த்து வளர்ந்ததன்று. அவரது வளர்ச்சிக்கு நான் உதவியது மில்லை, எனது முயற்சிகளுக்கு அவர் தோள் கொடுத்ததுமில்லை. அவர் தனது சொந்த அலுவல் காரணமாக எந்த உதவியையும் இதுவரை என்னிடம் கேட்டதில்லை. நானும் எதற்கும் அவரை நாடியதில்லை. பொது விடயங்களில் இணைந்து அலுவல்கள் பார்த்திருக்கின் றோம். தனிப்பட்ட முறையில் இருவருமே ஒருவருடமிருந்து ஒருவர் உதவிகளை நாடியதில்லை.

இதற்குக் காரணம் தனது அலுவல்களைத் தானே தனித்து நின்று நிறைவேற்றும் தகைமையும் ஆற்றலும் படைத்தவர் அவர். நானும் எனது திறமையில் அதிகம் நம்பிக்கையுடையவன். இந்தத் தனித்துவமே எமது நட்பின் மாசுமறுவற்ற தொடர்ச்சிக்கு அடிப்படைக் காரணமாகும். கங்கை இப்பொழுது மாசடைந்து வருகின்றது. நாம் கங்கையிலும் மேலானவர்கள்! உள்ளதைத் தான் சொல்லுகின்றேன்.
அதற்கேன் பொறாமைப்படுகின்றீர்கள்?

மற்றுமொரு முக்கிய காரணத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். பல நண்பர்கள் பிரி-வதற்கும் சண்டை பிடிப்பதற்கும் பொறாமை அடிப்படையாகின்றது. பொறாமையும் அவசர புத்தியும் நண்பர்களை மட்டுமன்றிச் சொந்த பந்தங்களையும் பகைவர்களாக்கி வருகின்றன. எங்களிடம் பொறாமைக்குணம் இல்லை. நாம் இருவரும் தனித்துவமும் தன்னம்பிக்கையும் உள்ளவர்கள். எங்கள் அனுபவங்களைக் கொண்டு, தன்னம்பிக்கை உள்ளவர் பிறர்மீது பொறாமை கொள்ளமாட்டார்கள் என்பது எனது முடிவு, தீர்ப்பு.

அவர் எனது வழியிற் குறுக்கிட்டதில்லை. நான் அவரது அலுவல்களில் தலையிட்டதுமில்லை.

ஒரு முக்கியமான சங்கதி என்னவென்றால், எங்கள் குறைபாடுகளை நாங்கள் இருவருமே நன்றாக உணர்ந்தவர்கள். அவருக்குச் சமய அறிவு குறைவு. எனக்கு விஞ்ஞான அறிவு குறைவு. அவர் கோயில் குளம் போவது குறைவு. நான் கோயிலிலேயே வளர்ந்தவன். எனக்குக் கவிதை எழுத வரும். அவருக்கு அது வராது. அவருக்கு துடுப்பாட்டம் என்றால் நித்திரையையும் துறந்து பார்ப்பார். நான் ரெனிஸ் ஆட்டக்காரன். அவர் யதார்த்த வாதி. நான் கற்பனை உலகத்தவன். இப்படிப் பார்த்தால் இருவருமே இரு துருவங்கள் என்றுகூடச் சொல்லலாம்.

இருந்தும் நாங்கள் நண்பர்கள், நெருங்கிய நண்பர்கள் - அதுவும் நீண்ட காலமாக! அவர் என்னை மதித்தவர். நான் அவரது திறமைகளைப் போற்றியவன். ஊருக்கு உழைப்பதில் இருவருக்குமிடையே ஒற்றுமை அதிகம். நாங்கள் எப்பொழுதுமே நண்பர்களாகப் பழகுவதில்லை. சிலசமயங் களில் அண்ணன் தம்பியைப்போலப் பழகுவோம். சிலசமயங்களில் கணவன் மனைவியைப் போல நடந்துகொள்வோம். சிலசமயங்களில் கீரியும் பாம்பும்போல வாதிடுவோம். அவர் வெட்டியதை நான் இரசித்துக்கொண்டு ஒட்டியிருக்கின்றேன். நான் கிழித்தவற்றை அவர் சிரித்துக் கொண்டே தைத்திருக்கின்றார்.

நகைச்சுவை உணர்வு இருவருக்கும் அதிகம். நகைச்சுவை உணர்வு பகைமையை வளர்ப்ப தில்லை. எமக்குப் பகைவர்கள் இல்லை!

நட்புக்கு இலக்கணமாய நண்பரின் நாகரிகத்தைப் பலர் பின்பற்றித் தமது பிரச்சனைகளைத் தீர்த்திருக்கின்றார்கள், வாழ்க்கையில் வெற்றிகள் கண்டிருக்கின்றார் கள். அவர் ஓர் உதாரண மனிதர், உறவையும் ஒற்றுமையையும் வளர்த்த உன்னத மனிதர்.

அவரது அழகான ஆன்மா அமைதி அடைவதாக!

**கவிஞர் வி. கந்தவனம்**





# எஸ். பொ.வின் சிந்தனைகள்

1. ‘இலக்கியம் வாழ்க்கையின் எதிரொலியும் பிரதிபலிப்புமானால், வாழ்க்கையின் அடித் தளமும் பெரும்பகுதியான பாலியல் (sex) விவகாரத்தைத் திரையிட்டு மரபு என்ற வரட்டுக்கூச்சலால் வேலிகட்டி, ஏன் நமது இலக்கிய வளர்ச்சியின் விதையை, கருப்பையிலேயே கருச்சிதைவு செய்யும் பணியில் ஈடுபடவேண்டும்.

2. மரபுகளை உடைப்பதில் அவர் முன்னுக்கு நிற்பார். அந்தக் கட்டுடைப்புக்கள் மரபின் தொடர்ச்சி என்று வாதிடுவார். கட்டுடைத்தல் தேவையையும், நியதியையும் பின்பற்றுகின்றது என்று நியாயம் கற்பிப்பார்.

3. சங்கத் தமிழுக்காக பண்டித ஆவேசத்துடன் வாதிடுவார். அதே மூச்சில் பாமரர் வழக்கே படைப்பலிக்கியத்தின் உயிர்த்துவ மொழி என்பார். இவற்றின் மத்தியிலே தெளிவான இலக்கியக் கொள்கையை அனுசரித்து வாழ்வதாக அறிக்கையிடுவார்.

4. ஈழத்திலிருந்து அகதிகளாக உலகெங்கும் பரம்பி வாழ்கின்ற தமிழர்கள் மண்ணின் நேசிப்பினையும், தமிழ்த்துவத் தின் அடையாளத்தையும் மட்டும் சுமந்து புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்கிறார்கள் என்ற உரிமை கோரல் முற்றிலும் உண்மையல்ல. அவர்கள் யாழ்ப்பாண கலாசாரத்தினால் உருவாக்கப்பட்ட கட்டித்த ஜாதியம் முதலான ஊத்தைகளையும் சுமந்தே சென்றுள்ளனர்.

5. த. இராஜகோபாலன்
யாழ்ப்பாண மண்ணிலிலே முற்போக்கு இலக்கிய சிந்தனைகள் தோன்றச் செய்த மகா உபகாரி இலக்கியவாதி எழுத்தாளர் ஓவியர் முற்போக்குக் கதைகள் பலருக்குத் தமிழ் ஆசானாய் உதவியவர். கனடாவில் வாழும் இவரை முற்போக்கு இலக்கியகாரர் இற்றைவரை மறந்தும் மறைத்தும் இலக்கிய வரலாறு எழுதுவது வேதனைக்குரியது.

6. மு. கார்த்திகேசன்
இலங்கை கம்யூனிஸ்கட்சியின் யாழ். கிளை 1947 இல் நிறுவப்பட்டதிலிருந்து சுமார் இரண்டு தசாப்தங்கள் அதன் செயலாள ராகப் பணி புரிந்து கம்யூனிஸத்தின் பரம்பலுக்காகவே வாழ்ந்த கடமை வீரர். யாழ். இந்துக் கல்லூரியின் ஆங்கில ஆசான். இளைஞர்கள் கலைஞர்கள் இலக்கிய வாதிகள் மத்தியிலே மாக்ஸிஸ பார்வை, சித்தாந்தம், சிந்தனை ஆகியவற்றை நாட்டிய முன்னோடி.



எஸ். பொவின் படைப்புகளிலிருந்து
தொகுப்பு எஸ். சந்திரபோஸ்.

அவரது சேவையை நினைவு கூராத ஈழத்தமிழ் வரலாறு வரலாறுமல்ல. நேர்மையுமல்ல.

7. தமிழ்த்துவத்தின் மீட்டெடுக்கும் வேள்வியிலே புதிய புறநானூறு படைக்கும் விடுதலைச் சந்தர்களும், வெறியர்களும் புதிய இலக்கிய களங்களையும் சமைத்துள்ளார்கள். போரும் புலப்பெயர்வும் பல இழப்புகளுடன் கூடியதாயினும், ஈழத்தமிழர்களின் வல்ல பங்குகளைக் கூர்மைப்படுத்தியுள்ளது.

8. போரின் வெற்றியிலே சிரத்தை ஊன்றியவன். புகழ், பதவி மேலாதிக்க முதன்மை போன்ற பிற சுகங்களை நாடான். அவற்றைத்துறந்து போர்குணத்தைக் கூர்மைப்படுத்துவான். முள்முடிதரிக்கும் பரிகசிப்புக்கும் சிலுவை சுமக்கும் சித்திரவதைக்கும் உள்ளாக நேரிடும். பிறந்த மண்ணிலிருந்து விரட்டி யடிக்கப்படுதலும் நிகழும்.


9. மார்க்ஸிஸம் மனித குலத்தின் ஈடேற்றத்துக்கும், பொருளியல், விமுத்திக்கும் ஏற்ற ஒரே வழி என்கிற நம்பிக்கையை வரித்த அதேகாலத்திலே தான் என் தமிழ் ஊழியமும் துவங்கிற்று. பின்னது முன்னத்தின் விரைவு வளர்ச்சிக்கு உதவும் என்கிற வேறு! சித்தாந்தம் - தத்துவம் - இயக்கம் - கோஷங்கள் ஆகியன மூர்க்கம் பெற்றுமுறுகின. அநீதிகளை அழித்து சர்வசம் உடைமைக்கு வழிவகுப்பதான சித்தாந்த கூடாரத்திலே தலைமைத்துவமும் அதிகார வர்க்கமும் உருவாகி தொண்டர்களை அணாப்பும் அவலத்தைக் கண்டேன். தத்துவத்திலே குழப்பம் இல்லை. தலைமைத்துவத்தை நத்தியோர் சமத்காரமான நியாயங்களைக் கற்பித்துக் குழப்பினார்கள். அவர்கள் நியாயங்கள் அலுப்பும், சலிப்பும் தரலாயின. இதனால் கட்சித் தொண்டும் இலக்கிய ஊழியமும் முரண்பட்டன.

10. நான் என்னும் எழுத்துச் சமரன். அதிகார மையங்களுக்குப் பணியாத ஓர்மம் உள்ளவன். உண்மையை முன்னெடுக்கும் போராளி. எழுத்து என் இடையறாத ஊழியம், எழுத்தே என் தவம் என்று வாழ்பவன். எண்பது வயது தாண்டியும் எழுதிக்கொண்டே இருக்கின்றேன். என் எழுத்தின் சாராளமும், இலக்கிய ஊக்கமும் வற்றிவிட்டதில்லை என்பது திருப்தி தருகின்றது.

# அஞ்சலி...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

எப்போதும் கொண்டிருந்தார். குறைந்த முதலீட்டிலேயே தன் படங்களை உருவாக்கினார்.



‘இரு கோடுகள்’, ‘அபூர்வ ராகங்கள்’, ‘தண்ணீர் தண்ணீர்’, ‘அச்சமில்லை அச்சமில்லை’, ‘ருத்ரவீணா’, ‘ஒரு வீடு ஒரு வாசல்’... உட்பட 8 முறை இந்திய அரசின் தேசிய விருதை தமிழுக்குக் கொண்டு வந்தவர் பாலசந்தர். இவை எல்லாவற்றுக்கும் சிகரமாக 2011இல் ‘தாதா சாகிப் பால்கே விருது’ பெற்றார். மேலும், இந்திய மத்திய அரசின் பத்மஸ்ரீ விருது (1987), அறிஞர் அண்ணா விருது (1992), சர்வதேச திரைப்பட விழாவில் ‘வாழ்நாள் சாதனையாளர் விருது’ (2008), தமிழக அரசு விருது (1968, 1993), பிலிம்பேர் விருது (1974 - 1994 காலகட்டத்தில் 12 முறை) என ஏராளமான விருதுகளை வாங்கிக் குவித்துள்ளார்.

‘பாலசந்தரின் படங்களை ரசித்தவர்கள் அவற்றைவிடவும் நல்ல படங்களைத் தேடித்தான் போயிருப்பார்கள். ஒருபோதும் மலிவான கமர்ஷியல் குப்பைகளை நாடியிருக்கமாட்டார்கள். அந்த வகையில் தமிழில் நல்ல ரசனை உருவாகக் காரணமாக இருந்தவர் கே. பாலசந்தர்’ என்கிறார் எழுத்தாளர் ரவிக்குமார். உண்மைதான். இதற்காக இன்னும் சில வருடங்கள் பாலசந்தர் பெயர் தமிழ்த் திரையில் நிலைத்திருக்கும்.

# நினைவுப் பேருரை

இளவாலை அமுது என்று இலக்கிய உலகத்தால் அழைக்கப்பட்ட செவாலியர் புலவர் அடைக்கலமுத்து அவர்களின் நான்காவது ஆண்டு நினைவுச் சொற்பொழிவு கனடா மார்க்கம் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆர்மடேல் பொதுமக்கள் மண்டபத்தில் 30-11-2014 ஞாயிறு மாலை நடைபெற்றது. வாழ்நாட்பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும், பேராசிரியர் வணக்கத்துகுரிய ஜோசெப் சந்திரகாந்தன் அடிகளாரும் நினைவுச் சுடரை ஏற்றி நிகழ்வைத் தொடக்கி வைத்தனர்.



அமுதுப் புலவரின் மாணவரான சபா. அருள்சுப்பிரமணியம் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கி நிகழ்ச்சியை நடத்திச்சென்றார். இவர் தமதுரையில் அமுதுப்புலவர் அவர்கள் மாதகலில் ஆசிரியப் பணியை மேற்கொண்ட காலத்தில் மாதகலில் கலை இலக்கியத்தில் நாட்டம் கொள்ளும் மணவ சமூகமொன்று உருவாக வழி சமைத்தார் என்று பெருமையோடு கூறினர்.

அமுதுப் புலவரின் மகனான பேராசிரியர் ஜோசெப் சந்திரகாந்தன் அடிகளார் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்புநிகழ்ச்சியாக அமுதுப் புலவரின் நினைவுப் பேருரை இடம்பெற்றது. யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முன்னைநாள் பேராசிரியர் கலாநிதி. நா. சுப்பிரமணியன் அவர்கள் ‘தமிழிலக்கியத் திறனாய்வியலில்



ஈழத்தின் முப்பெரும் ஆளுமைகள்’ என்னும் தலைப்பில் கலாநிதிகள் க.கைலாசபதி, கா. சிவத்தம்பி, மற்றும் மு. தளையசிங்கம் ஆகியோரின் திறனாய்வியல்சார் இயங்குநிலைகள் பற்றிய ஒரு வரலாற்றுப் பார்வையை வெளிப்படுத்தினார்.

காலம் இதழ் ஆசிரியர் திரு. செல்வம் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

# நினைவும் பெட்டகம் நினைவிழந்ததோ?



கல்வியின் கலங்கரை விளக்கம் குடை சாய்ந்ததோ
கல்வியே கொடுத்த கல்வியலாளரின் கருப்பொருள் சரிந்ததோ
தபால்கலைக் கழகமாய் நடமாடிய அறிவுச் சுடரணைந்ததோ
பகலவனாய் பகுத்தறிவுச் சுடர்பரப்பிய ஒளிக்கீற்று அணைந்ததோ

பண்பின் உறைவிடம் பாசத்தின் நதிமூலம் மறைந்ததோ
உண்மையின் திருவுருவம் உவப்பின் மறுவுருவம் மாய்ந்ததோ
கண்ணனாய் காவலனாய் நல்லன்பனாய் வாய்ந்த ஒளி குன்றியதோ
மண்ணோர்க்கு மனிதம் கற்றுத்தந்த மானுடம் மறைந்ததோ

நினைவாற்றல் நிலையாற்றல் கலையாற்றல் காற்றில் கலந்ததோ
முனைப்போடு இராஜாஜிக் கொப்பான அறிவாற்றல் அகன்றதோ
தனைத்தந்து தரணிக்கு உயிர்தந்த உயிரிலாளர் மறைந்தாரோ
வினைதந்த விஞ்ஞானவழி நின்ற உயிர்மூச்சு நின்றதுவோ

பட்டறிவு பழுத்த பாரறிவு கொண்டஎம் இமயம் சாய்ந்ததோ
தொட்டறிவு தொடரறிவு பேரறிவு தந்தஎம் பெருந்தலை சாய்ந்ததோ
தோட்டப் பெருவிருப்பின் பூந்தோட்டம் பொலிவிழந்து போனதுவோ
தோட்டியாய் எமக்குழைத்த தண்ணளிய பேரொளி மறைந்ததேனோ

சத்தம் சலனமின்றி சந்ததம் போற்றிநின்ற அமைதிதான் குலைந்ததோ
சித்தம் சிறகடிக்க சிரிப்பொலியில் எமையாழ்த்தும் சிங்காரம் குன்றியதோ
பித்தம் பிடித்திடாது புத்திதந்த புன்முறுவல் புவிவிட்டகன்றதுவோ
நித்தம் நினைவிருத்தும் நல்லறிவுப் பெட்டகமும் மாயமானதோ

சூறாவளி வந்ததுமேன் சுனாமிதான் கொண்டதுமேன்
சூரியனாய் அறிவுச் சுடர்தந்த ஒளிக்கீற்றைக் கொண்டதுமேன்
சீரியராய் செம்மை அறங்கிடந்த செங்கோல் சாய்ந்ததுமேன்
சீராளர் சீக்கிரத்தில் சென்றுவிட சித்தம் கொண்டதுமேன்?

**- த. சிவபாலு -**

## முக்கிய அறிவித்தல்

அதிபர் திரு.பொ.கனகசபாபதி அவர்களின் மறைவ-
னால் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்
சங்கம் நடத்த இருந்த இராப்போசன விருந்தும்
பொதுக்கூட்டமும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஜெயேந்திரன்: 416.705.1493
சிவ கௌரிபாலன்: 416.451.8427
குரு அரவிந்தன்: 905.861.9323
www.mahajanan.org

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com



Seelan Siva Real Estate
Buy.Sell.Invest



Seelan Siva Aiyadurai
Real Estate Broker
Direct: 416.451.0271
Email:seelansiva@gmail.com
Web:www.Egtahomes.com

Uthayan Aiyadurai
Sales Representaive
Direct: 416.999.3555
Email:aiya14@gmail.com

"THANK YOU FOR YOUR SUCCESSFUL REFERRALS"

WE WOULD LIKE TO TAKE THIS OPPORTUNITY
TO WISH YOU AND YOUR FAMILY
A HAPPY NEW YEAR..
&.
HAPPY THAI PONGAL...
2015







கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது!

HOMELIFE/GTA Realty Inc.,Brokerage*
5215 Finch Ave. E, Suite 203, Toronto, ON M1S-0C2 Bus:(416)321-6969

This is not intended to solicit properties currently listed for sale.
*Independently Owned and Operated
*Some Conditions Apply


# நகைச்சுவைத் தொடர் 300
# ராசம்மா ராச்சியம்
கலகலப்பு தீசன்






## 25 ஆவது வருடத்தில் விளம்பரம் இதழ்

அன்றாடம் மனித வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்வுகளை ஏதோ எழுத்துருவில் யாரும் மனம் புண்படாத வகையில் ராசம்மாவின் ராஜ்யம் என்ற தலைப்பில் சில கற்பனைப் பாத்திரங்களை உருவாக்கி 300 அங்கம் வரை பிரசுரிக்க உதவிய விளம்பரம் இதழுக்கு மனமார்ந்த நன்றி. கலகலப்பான வாழ்த்துக்கள்.



மாணவனாக இருந்த காலத்தில் இலங்கை இந்தியா பத்திரிகைகளில் இணுவையூர் தீசன் என்ற புனைபெயரில் கதை கவிதை கட்டுரை மேடை நிகழ்ச்சி சினிமா விமர்சனங்கள் நாடகங்கள் என எழுதி பிரசுரிக்க ஆதரவு தந்தவர்களுக்கு நன்றி. அதற்கு மேலாக கலகலப்பு எனும் நகைச்சுவை இதழ் அச்சுப்பிரதியாகி கலகலப்பு தீசன் என்ற பெயரை கனடாவரை மறக்காத நண்பர்கள் கலகலப்பு எனும் நகைச்சுவை தொகுப்பு திரை வரை கொணர்ந்து வெற்றிவிழா கொண்டாட வைத்த சகலருக்கும் கலகலப்பான புதுவருட வாழ்த்துக்கள்.



ராசம்மாவின் ராஜ்யம்…….தொடர்கிறது.




உலகர் ராசம்மா ரூபன் ரூபி முருகேசர் ஆட்டிலறி அன்னம்மா ஐ பொட் அகிலா பிராங்பேட் பேரம்பலம் தாமோதரம் பிறிம்லி மீனா மதன் ஆகியோரின் கலகலப்பான புது வருட வாழ்த்துக்கள்.

8.1.2015 இல் இலங்கை ஜனாதிபதி தேர்தல்.
தை பிறந்தால் வழிபிறக்கும்.
பழையன கழிதலும் புதியன புகுதலும் இயற்கை.


மேரி கிறிஸ்மஸ். ஹப்பி நியூ இயர். உலகர் வீட்டில் மட்டுமல்ல எல்லா வீட்டிலும் தனித்தனி அறைகளில் இதே சத்தம்தான். ஒரு வீட்டிலுள்ள 4, 5 பேர் ஒருவரோடொருவர் கதைக்க நேரமில்லை. ஆனால் ஒவ்வொருவரின் செல்போன், ஐ பொட், இன்ரநெற், ஈமெயில் மிகவும் பிசியாக இருந்தது. வளர்கிறது தொழில் நுட்பம் அழிகிறது மனித இனம். உலகர் சிறிய அன்பளிப்பு பார்சலுடன் முருகேசரின் றூமுக்குள் போகவும் முருகேசர் ஸ்பீக்கர் போனில் பேரப்பிள்ளைகளுடன் கதைத்துக் கொண்டிருந்தார். கண்களிலிருந்து நீர் கசிந்து கொண்டிருந்தது.

உலகரின் மனம் எங்கோ சினிமாப் பாடலை நினைவுக்கு கொண்டு வந்தது.
கண்ணிலே நீரெதற்கு காலமெல்லாம் அழுவதற்கு...
அது சற்று மாறி உலகரின் மனதுள் ரீங்காரமிட்டது.
கண்ணிலே நீரெதற்கு முதுமையிலே தனிமையில் அழுவதற்கு.



உலகரைக்கண்டதும் தன்னைச் சமாளித்துக் கொண்டு வா வா உலகு என தளதளத்த குரலில் அழைத்த வண்ணம் ரெலிபோனை வைத்தார் முருகேசர். உலகர் கொடுத்த அன்பளிப்பை வாங்கி வைத்துவிட்டு ஏன் உலகு வீணசிரமம். இண்டைக்கு பேஸ்புக்கில் 500 பேருக்கு மேலை ஹப்பி நியூஇயர் மெசேச் அனுப்பியிருக்கினம். நீ ஒரு ஆள்தான் நேரிலை வந்திருக்கிறாய் என்று சொல்லிக்கொண்டு பெலத்து அழுதுவிட்டார். உலகரின் கண்கள் தன்னை அறியாமல் அவரது சால்வையை நனைத்து. சில வேளைகளில் வாய் பேசாவிடத்து விழிகள் காட்டிக்கொடுத்துவிடும்.

உலகு, நாகரிகம் வளர்ச்சி என்று கனபேர் கதைக்கினம். அதன் முடிவு பாரதூரமான விளைவுகளைக் கொண்டுவருகுது. எத்தனை உயிர்ப்பலி? வேறு வாகனத்தை மோதிவிட்டு அல்லது வீதி கடப்பவரை மோதிவிட்டு தப்பி ஓடுபவர்கள் தொகை கூடிக்கொண்டே போகிறது. (HIT & RUN) அதிலும் குடித்துவிட்டு மதுபோதையில்தான் அதிக விபத்துக்கள் நடக்கின்றன என ஒரு பேட்டியில் கூறுவதுபோல கூறிகொண்டேயிருந்தார் முருகேசர்.



யாரைப் பிழை சொல்வது?
செல் போன் பாவித்தபடி வாகனம் ஓட்டுதல், பாட்டு கேட்டபடி அதிலே லயித்தபடி வீதியினை கடத்தல், இளம் கன்று பயமறியாது என்பது போல பேஸ்புக்கில், ஈ மெயிலில், ரெக்ஸ் மெசேச் போன்றவற்றில் சொல்லத்தகாத வார்த்தைப் பிரயோகங்களை செய்தியாக அனுப்புதல்.

'உன்னை கவனிக்க வேண்டிய விதத்தில் கவனிக்கிறேன்.' 'நேரில் கண்டால் உயிரோடு விடமாட்டேன்.' (ஆகக் கூடிய ஆத்திரம் வரும்பொழுது) 'உன்னைக் கொன்றுவிடுவேன்' என்ற வார்த்தைகள் சட்டப்படி கொலைப்பயமுறுத்தல் (threaten to death). மிகவும் பயங்கரமான குற்றமாகும். எழுத்தில் அனுப்பப்பட்ட செய்தி. இதனை மறுக்கமுடியுமா? பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் இதன் விளைவு தெரியாது பல சட்டப்பிரச்சினைகள், இன்னல்களை அனுபவிக்கிறார்கள்.

யாகாவா ராயினும் நா காக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. எதை அடக்க முடியாவிட்டாலும் நாக்கை அடக்க வேண்டும். இல்லையேல் சொல்லடிபட்டு சோகமடைவர் என்று சொல்லிவிட்டு அதுசரி உலகு, நாங்கள் சொல்லுறதை கேட்டது ஒரு காலம். இப்ப யார் சொல்லுறதை யார் கேட்கிறது.



இலங்கையில் மழை புயல் மண்சரிவு.
சில இடங்களில் மக்கள் தங்கள் இடங்களுக்கு போவதற்கு றோட்டுமில்லை. வெள்ளத்தைக் கடக்க போட்டுமில்லை. இந்த அமளி துமளிக்குள்ளும் வோட் கேட்பவர்கள் சூறாவழி பிரசாரம் செய்கிறார்கள்.
மக்களைக்கண்டதும் கரம் சிரம்மேல் கூப்பி வாக்குக் கேட்கிறார்கள்.



2014 ஆம் ஆண்டு சர்வதேச ரீதியில் எத்தனை இயற்கை அழிவுகள் மனிதப் படுகொலைகள். விதவிதமான செய்திகள்.



கடந்தவாரம் ஏசியன் எயர் விமானம் புறப்பட்டு சில மணிநேரங்களில் காணவில்லை என்ற செய்தியும் பல தேடுதல்களின் பின்னர் அது விபத்துக்குள்ளானதென்னும் செய்தியும் வந்துள்ளது.



2014 இல் இயற்கை அழிவு, செயற்கை அழிவு அதற்கும் மேலாக நம்மவரிடையே பலரின் மறைவுகள் மறக்க முடியாதிருக்கின்றன.



அதிபர் என்றாலே அடுத்த வரியாக மாஸ்ரர் என்ற சொல்லை மனது பதிவுசெய்யும். ஆம் அதிபர் கனகசபாபதி மாஸ்ரர். தமிழர் புலம் பெயர்ந்த காலத்தில் நைஜீரியாவிலும் கனடாவிலும் நடைபெறும் முத்தமிழ் விழாக்கள் என்றால் இவரின் தமிழின்றி விழாக்கள் இல்லை. நைஜீரியாவில் தமிழ் விழாக்கள், தமிழர் வளர்ச்சி பற்றி இவரது வீட்டில்தான் அங்குள்ள தமிழர்கள் கூடி கலந்துரையாடுவோம் என கீதவாணி வானொலியில் மதிப்பிற்குரிய சாமி அப்பாத்துரையவர்கள் குறிப்பிட்டார்.

இளையபாரதியின் கனேடிய தமிழ் ஒலிபரப்புக்கூட்டுத்தாபன வானொலியில் அதிபரைப்பற்றிய வாழ்க்கை வரலாறு ஒலிபரப்பானபொழுதுதான் ஒருவரால் அதுவரை காலமும் இவ்வளவு செய்ய முடிந்திருக்கிறதா என ஆச்சரியப்பட வைத்திருக்கிறது.


வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறை
தெய்வத்துள் வைக்கப்படும்.

மேடை நிகழ்ச்சிகள் புத்தக வெளியீட்டு விழாக்கள் அரங்கேற்றம் போன்றவற்றில் குத்துவிளக்கேற்றல், ஆசியுரை, கலந்துரையாடல் போன்றவற்றில் இவரின்றி எதுவும் நடக்காதென்பது போல எங்கும் நிற்பார். 'நடைஉடை பாவனை' அவரைப்பார்த்து நாம் பழகவேண்டும். வெள்ளையுடையுடன் அவர் நடந்து வரும் காட்சி எல்லோர் கண்முன் நிற்கிறதா? அவர் எமது மனதைவிட்டு மறையவில்லை.

## ஜனவரி 1….15

1. 01-01-2015 ஆங்கில புது வருடம்.

1. யாழ்ப்பாணத்தில் முதன்முதல் காவல்துறை (பொலிஸ்) அமைக்கப்பட்டது - 1866.





1. விக்டோரியா மகாராணிக்கு பிறந்தநாள் பரிசாக பர்மா வழங்கப்பட்டது - (1886).

3. யாழ்ப்பாணத்தில் 4வது உலகத்தமிழாராச்சி மாநாடு ஆரம்பமானது.

2. கண்டி கடைசி அரசன் கீர்த்தி சிறீ ராஜசிங்கன் (1782)

3. குமார் பொன்னம்பலம் நினைவுதினம்


4. திருவெம்பாவை பூர்த்தி



7. யாழ்ப்பாணத்தில் உதயதாரகை பத்திரிகை தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியானது - 1841.

10. 4 வது உலகத்தமிழாராச்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வில் 11 தமிழ் மக்கள் பொலீசாரால் சுட்டுக்கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர் 1974.

12. எம்.ஜி.ஆர். (கொலை முயற்சி) எம்.ஆர். ராதாவினால் கழுத்தில் சுடப்பட்டார். (எம்.ஜி.ஆர். படங்களில் வில்லனாக நடிப்பவர் எம்.ஆர் ராதா.)



14. தைப்பொங்கல்

15. சிறீ சபரிமலை ஐயப்பன் மகர ஜோதி.

15. பட்டிப்பொங்கல்



## ஸ்ரீமதி செல்வானந்தி சுகுமார் அவர்களின்
## நிருத்திய கலாஷேத்திர மன்றம் நடாத்திய 20 வது ஆண்டு விழா
# "பரத நாட்டிய அர்ப்பணம்"

ரொரன்ரோ நகரில் 20 ஆண்டுகளாக வெற்றிகரமாக இயங்கிவரும் நிருத்திய கலாஷேத்திர நாட்டிய மன்றம் நடாத்திய 20ஆவது விழா "பரத நாட்டிய அர்ப்பணம்". ஸ்காபரோ பெரிய சிவன் ஆலய மண்டபத்தில் 29 -11 - 2014 அன்று மிகவும் சிறப்புற நடைபெற்றது.

பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைசனும், சிறப்பு விருந்தினர்களாக Dr. A சண்முகதாஸ் PH.D. Dr.மைதிலி தயாநிதி PH.D. கீதவாணி அதிபர் நடா .ஆர். ராஜகுமார், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி முன்னாள் உப அதிபர் சிதா வேலுப்பிள்ளை, சமூக சேவையாளரும், ஊடகவியளாளருமான திரு. சாமி அப்பாத்துரை அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

நிருத்திய கலாஷேத்திர மன்ற அதிபர் ஸ்ரீமதி செல்வானந்தி சுகுமார் பல பாடல்களுக்கு நடன அமைப்பினை தத்துருபமாக அமைத்து பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடதக்கது.

ஆசிரியையும், மாணவர்களின் பெற்றோரும் இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்தனர்.



பரதநாட்டிய அர்ப்பணம் - 2014

நிருத்திய கலாஷேத்திர மன்ற அங்கத்தவர் மா. மதிசயன் 416-278-5345




"Let me help you make the right choice"
Schuren Sriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393



BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for
BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL
Vany Jeganmohan
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca
HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6962
GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2


"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
RE/MAX
All Stars Realty Inc., Brokerage
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit
கவலை வேண்டாம்
Guaranteed Result


அகத்தின் அழகு முகப்பில் தெரியும்.....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com


THE TRUSTED MORTGAGE AGENT
"Solution For Ever Mortgage"
MORTGAGE ALLIANCE
The Guardian
•I will arrange your 1st Mortgage with 5% down.
•Need a 2nd Mortgage???
"When banks say no We say yes"
@ Interest rate starting from 6.99%+.
Thayalan Gobalakrishnan
(M12001612)
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Contact: 416.575.3211
E-Mail: thaya.gobal@gmail.com
*Some Terms & Conditions May Apply


LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com


Free Real Estate Class - Call: 416.321.6969
RealEstate / Commercial Investments
DUFFERIN & LANGSTAFF
Truck Repair
BUILDING, BUSINESS + EQUIPMENTS
Price: $1.3 Million
HWY 27 & KING RD
Gas station for sale
Asking price: 749,000
FINCH & MCCOWAN
Bedroom :3 + 1
Washroom: 3
Price : $489,990
BELLAMY & EGLINTON
LEASE
Bedroom : 3
Washroom: 2
Price : $ 1900
MARKHAM & FINCH
KNIT WEAR
BUSINESS + FOUR UNITS
Asking price: 829,900
PORTUNION & KINGSTON
BUSINESS FOR SALE
Asking Price: $119,900
RE/MAX
Dynasty Realty Inc.
A. Anton Jeeva B.Eng
Ranked among the top 1% of all Realtors in the GTA
Mortgage can be arranged from 2.4%
Mortgage Rates Starting From 2.5%
Dir: 416.575.5055
Remax Dynasty Realty Inc., Brokerage 8 Shadlock St, Unit #7 Markham, ON L3S 3K9


நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
இலவச ஆலோசனை வழங்கப்படும்
சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.
இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796
வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician I.G.Ayurvedic Medical Services (SriLanka)


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED